# முன்னைய அரசுக்கு உதவி அமைச்சர் பாராட்டு!





பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரேட்,
யாழ்ப்பாணம்.



Registered as a News Paper in Ceylon ஸ சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 191
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆவணி 5 ஜமா. ஆகிர் 18 வெள்ளிக்கிழமை [21-8-70]



கல்வனைஸ்ட்
தண்ணீர் தாங்கிகள்
(GL WATER TANK)
400 கலன்களிலும்
மற்றும் தேவையான அளவுகளிலும்
கிடைக்குமிடம்:
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7130


## சுன்னுகம் வரவேற்பில்

யாழ்ப்பாணம், வெள்ளி

முன்னைய அரசாங்கம் வடபகுதிக்கு செய்துள்ள சேவையை மக்கள் அரசாங்கத்தின் பொதுச்சேவை உள்ளூராட்சி உதவி மந்திரி திரு. நீல் டி. அல்விஸ் பாராட்டினர்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அவர் சுன்னுகம் பட்டினசபை நூல் நிலையத்தில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின் போதே முன்னைய அரசாங்கத்தை மனந்திறந்து பாராட்டினர்.

சுன்னுகம் பட்டினசபைத் தலைவர் திரு. பொன். நாகலிங்கம் தலைமையில் நடந்த இந்த வரவேற்பு வைபவத்தில் உதவி அமைச்சர் திரு. அல்விஸ் பேசுகையில் கூறியதாவது:

கடந்த அரசாங்கம் வடபகுதியைப் புறக்கணித்திருக்குமென இங்குவருமுன் எண்ணியிருந்தேன் ஆனல் நேரில் இங்கு விஜயம்செய்து பல இடங்களைப்பார்த்த போது கடந்த அரசாங்கம் பல அபிவிருத்தி வேலைகளைச் செய்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இதற்காக கடந்த அரசாங்கத்தை மட்டும் பாராட்டுவதுடன் நான் நின்றுவிடவில்லை. வடபகுதி எம். பிக்களின் உற்சாகத்தினலேயே இந்தளவுக்கு நடந்திருக்கிறதென்பதை மறுப்பதற்கில்லை. அவர்களையும் சேர்த்துப்பாராட்டுகிறேன்.

எங்கள் அரசும் வடபகுதியில் பல அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்துமென உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# கொழும்புத் துறைமுகத்தில் இறக்குமதி வேலைகள் துரிதம்

## ஒரே மாதத்தில் $2\frac{1}{4}$ லட்சம் வருமானம்

கோட்டை, வியாழன்

வெளிநாடுகளிலிருந்து கொழும்புத்துறைமுகத்திற்கு வந்தஉணவுக்கப்பல்களை தாமதமின்றி திருப்பி அனுப்பிவைத்ததன்மூலம் அரசாங்கம்கடந்த ஒரு மாத காலத்தில் இரண்டுலட்சத்து 28 ஆயிரத்து 338 ரூபாவை அந்நியசெலாவணியாகச் சம்பாதித்துள்ளது. இத்தகவலை உள்நாட்டு வெளிநாட்டுவர்த்தக அமைச்சர் திரு: ரி. பி. இலங்கரத்தின தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்க காலத்தில் துறைமுகத்துக்கு வந்த கப்பல்கள் மாதக் கணக்கில் தங்கிநின்றதாகவும், இதனல் தாமதிப்புச் செலவாக பெருந்தொகையான பணம் விரயமாக்கப்பட்டதாகவும் திரு இலங்கரத்தின கூறினர்

கூட்டணி அரசாங்கம் பத...

துரிதப் படுத்துவதற்கான நட[illegible]க்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் இறக்குமதிவேலைகள் துரிதமாக நடைபெற்று நாளுக்குநாள் கப்பல்களை திருப்பி அனுப்பி வைக்கப் பட்டதால் கணிசமான தொகை அந்நிய [illegible] வணி சம்பாதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க புள்ளி விபரம் கூறியது.

## கட்டுவன் கொலை வழக்கு

## கிளிநொச்சி ப. ச. தேர்தலில் 19 பேர் போட்டி

மட்டுவில், வியாழன்

இம் மாதம் 29-ந் திகதி நடைபெறவிருக்கும் கிளிநொச்சி பட்டினசபையின் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஏழு வட்டாரங்களில் தமிழரசுக்கட்சி நேரடியாகப் போட்டியிடுகின்றது. போட்டியிடும் பத்தொன்பது அபேட்சகர்களின் விபரம் வருமாறு:-

1-ம் வட்டாரம்:- திரு. ச. வைத்திலிங்கம் (சுயேட்சை) திரு. சு. முருகேசு (தமிழரசு

2-ம் வட்டாரம்:- திரு. சி. பொன்னம்பலம் சுயேட்சை) திரு. பாலசுப்பிரமணியம் (தமிழரசு) திரு. வி. எம். சின்னத்துரை (சுயேட்சை)

3-ம் வட்டாரம்:- திரு. இ. கிருஷ்ணராஜா (சுயேட்சை) திரு. சி. விக்னராஜா ... நடராஜா (தமிழரசு) திரு. ஏ. சிவஞானம் (சுயேட்சை)

5-ம் வட்டாரம்: திரு. சு. பொன்னையா (சுயேட்சை) திரு. பசுபதி (தமிழரசு) திரு தங்கராஜா (சுயேட்சை) திரு. விஸ்வலிங்கம் (சுயேட்சை)

6-ம் வட்டாரம்: திரு. ச. முருகேசு (சுயேட்சை) திரு. க. ச. கந்தையா (தமிழரசு) திரு. மகாலிங்கம் (சுயேட்சை

7-ம் வட்டாரம்: திரு. க. நடேசலிங்கம் (தமிழரசு) திரு. ஆறுமுகம் (சுயேட்சை) திரு. ஏ. திருச்செலவம் (சுயேட்சை)

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்கள் இத்தேர்தலில் போட்டியிடுகின்றபோதிலும் அவர்கள் சுயேட்சையாகவே போட்டியிடுகிறார்...

## தேசியசுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 312-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதற் பரிசு
05 S 0641 ரூ 97,840 00

இரண்டாவது பரிசு
31 Q 0099 ரூ 39,136-00

மூன்றுவது பரிசு
16 C 0798 ரூ 9,784·00

தலா ரூபா 489-20 சதம் பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 16 A 0675 | 05 A 0699 |
| 17 A 0486 | 04 A 0209 |
| 30 A 0867 | 36 A 0576 |
| 25 A 0220 | 36 A 0475 |
| 11 A 0905 | 18 B 0469 |
| 30 B 0004 | 22 B 0177 |
| 09 B 0863 | 26 B 0516 |
| 08 C 0440 | 16 C 0425 |
| 34 D 0003 | 30 D 0235 |
| 10 D 0073 | 37 D 0630 |
| 25 D 0378 | 20 D 0197 |
| 14 D 0028 | 03 D 0960 |
| 13 D 0685 | 30 E 0875 |
| 02 E 0696 | 03 E 0658 |
| 33 F 0302 | 15 F 0466 |
| 27 F 0555 | 35 F 0227 |
| 24 F 0865 | 20 G 0196 |
| 25 G 0096 | 01 H 0219 |
| 32 J 0749 | 03 J 0410 |
| 25 J 0795 | 16 J 0930 |
| 25 K 0966 | 26 K 0368 |
| 22 K 0581 | 32 K 0541 |
| 41 L 0618 | |
| 30 C 0922 | 15 M 0028 |
| 24 M 0438 | 22 M 0533 |
| 23 N 0039 | 17 N 0059 |

## அமோக வரவேற்பு

யாழ்ப்பாணம், சனி

பொதுசேவை உள்ளூராட்சி உதவி மந்திரி திரு. நீல்டி அல்விஸ் உத்தியோகபூர்வமாக யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்தபோது அமோகமான வரவேற்பு அளிக்கப்பட்டது நேற்று நண்பகல் யாழ் புகையிரதநிலையத்தில் உதவி அமைச்சர் வந்து இறங்கிய போது யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் வரவேற்றார்.

இவ்வரவேற்பின்போது வடபகுதியைச் சேர்ந்த தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் எவரும் சமுகமளிக்கவில்லை நியமன எம். பி. திரு. எம். சி சுப்பிரமணியம், திரு வி பொன்னம்பலம் திரு பொ நாகலிங்கம் மற்றும் இடதுசாரி பிரமுகர்கள் வரவேற்பில் கலந்து கொண்டனர்

யாழ்ப்பாணர் உதவி அரசாங்க அதிபர் திரு ரி, முருகேசம்பிள்ளை யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு யோசப் ஆகியோரும் மந்திரிக்கு மாலை சூட்டிவரவேற்ருர்கள்,

யாழ்ப்பாணம் புகையிரத நிலையம், தேசிய கொடிகளாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி சமசமாஜக் கட்சிக் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது, புகையிரதநிலைய முகப்பில் சிகரம் அமைக்கப்பட்டு பந்தல்போடப்பட்டு, அதன் கீழ் பூரணகும்பம் வைக்கப் பட்டிருந்தது. புகையிரத நிலையத்திற்கு வெளியில், மாவிலை தோரணங்களாலும் வாழைகளினுலும் சிகப்பு, நீலகடதாசிகளினுலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது

ஸ்தலஸ்தாபன நகரசபை தொழிலாளர் சங்கத்தினர் வடமாகாணக்கிளையின்மகஜரொன்றை நியமனஎம். பி. திரு. எம். சி. சுப்பிரமணியம் உதவிமந்திரியிடம்சமர்ப்பித்தார். (குவிம)

## நிலாவரையில்

புத்தூர், வியாழன்

பொதுசேவை உள்ளூராட்சி உதவி மந்திரி திரு. நீல்டி அல்விஸ் இன்று புத்தூர் நிலாவரையிலுள்ள வற்ருத கிணற்றுக்கு விஜயம் செய்து அங்கு அமைக்கப்பட்டிருக்கும் நீர்பாசன குழாய்நீர்த்திட்டத்தையும் பார்வையிட்டுச் சென்ருர். இவருடன் அரசாங்க அதிபரும் கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. வி. பொன்னம்பலமும் மற்றும் பலரும் வந்திருந்தனர்.

## "வர்க்க வேறுபாடற்ற!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ட்சை) திரு. பாலசுப்பிரமணியம் (தமிழரசு) திரு. வி. எம். சின்னத்துரை (சுயேட்சை)

3-ம் வட்டாரம்:- திரு. இ. கிருஷ்ணராஜா (சுயேட்சை) திரு. சி. விக்னராஜா (தமிழரசு)

4-ம் வட்டாரம்: திரு.இ.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்கள் இத்தேர்தலில் போட்டியிடுகின்றபோதிலும் அவர்கள் சுயேட்சையாகவே போட்டியிடுகிறார்கள் என்பது குறிப்பித்தக்கது.

கப்பல்கள் மாதக் கணக்கில் தங்கிநின்றதாகவும், இதனால் தாமதிப்புச் செலவாக பெருந்தொகையான பணம் வீணுக்கப்பட்டதாகவும் திரு இலங்கரத்தின கூறினர்

கூட்டணி அரசாங்கம் பதவிக்கு வந்த காலத்திலிருந்து கப்பல்களிலிருந்து சரக்குகள் துரிதமாக இறக்கப்பட்டதினல், ரூபா 2 லட்சத்து 28,338 ரூபா மிச்சப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உல்லாசப் பிரயாணிகள் அமைச்சருடனும், வர்த்தக அமைச்சருடனும் நடைபெற்ற மகாநாடு ஒன்றில் இறக்குமதி வேலைகளைத்

...ளப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் இறக்குமதிவேலைகள் துரிதமாக நடைபெற்று நாளுக்குநாள் கப்பல்களை

...வணி சம்பாதிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க புள்ளி விபரம் கூறியது.

## தமிழிலும் 'ஸ்ரீலங்கா' பொறித்த தபால் தலை

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழிலும் 'ஸ்ரீலங்கா' என்று எழுதப்பட்ட 10 சத முத்திரை ஒன்று குடியரசு ஞாபகார்த்த தினத்தையொட்டி அடுத்த வருடம் ஜனவரி மாதம் 8ந் திகதி வெளியிடப்படவிருக்கிறது.

யாழ்ப்பாணம் ஏ.சி.எஸ். பிரரெலிக் சேர்விஸ் உரிமையாளர் திரு. கி. செ. முத்துக்குமாரு மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: ''காலஞ்சென்ற முதல் பிரதமர் டி. எஸ். சேனநாயகாவின் உருவப் படத்தைக்கொண்ட 10 சத முத்திரைக்குப் பதிலாக மற்றொரு 10 சத முத்திரை அடுத்த மாதம் 26ந் தேதி வெளியிடப்பட விருக்கிறது. காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயகாவின் ஞாபகார்த்தமாக இம்முத்திரை வெளியிடப்படும். வைத்திய நூற்றாண்டையொட்டி செப்டெம்பர் 1ந் திகதி 5 சத முத்திரையும், 45 சத முத்திரையும் வெளியிடப்படவிருக்கிறது. 45 சத முத்திரை இலங்கையில் இரண்டாவது தடவையாக வெளியிடப்படுகிறது.

## கட்டுவன் கொலை வழக்கு தொகுப்புரை ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கட்டுவன் கொலை வழக்கு நேற்றுமூன்றுவது தினமாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் ஆர். ஈ. தம்பிரத்தினம் தொகுப்புரை நிகழ்த்தினர்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் எ. எஸ். சிறிமானே முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டு வருகிறது விசாரணையைப் பார்ப்பதற்கு கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்

இவ்வழக்கில் கட்டுவனில் 69ம் ஆண்டு பெப்ரவரி 16ம் தேதி தம்பிமுத்து நல்லையாவை கொலை செய்ததாக வி. மகாலிங்கம். கே தங்கராசா, கே. விஸ்வலிங்கம், வி. கதிர்காமநாதன் ஆகியோர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் ரி. டபிள்யூ இராசரத்தினம், அட்வகேட் ஆர் ஈ. தம்பிரத்தினம் ஆகியோர் அட்வகேட் ரி, கனகசபையின் உதவியுடனும், புறக்டர் எஸ். செல்வரத்தினத்தின் அனுசரணையுடனும் ஆஜரானர்கள். விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

| | |
|---|---|
| 25 J 0795 | 16 J 0930 |
| 25 K 0966 | 26 K 0368 |
| 22 K 0581 | 32 K 0541 |
| 41 L 0618 | |
| 30 C 0922 | 15 M 0028 |
| 24 M 0438 | 22 M 0533 |
| 23 N 0039 | 17 N 0059 |
| 30 N 0076 | 24 N 0838 |
| 04 N 0203 | 34 N 0407 |
| 28 O 0918 | 01 O 0264 |
| 13 P 0118 | 19 P 0553 |
| 05 Q 0372 | 35 Q [illegible]890 |
| 15 Q 0914 | 06 Q 0462 |
| 29 Q 0373 | 13 Q 0213 |
| 17 Q 0736 | 35 R 0876 |
| 34 R 0156 | 27 R 0107 |
| 30 R 0341 | 34 R 0184 |
| 35 S 0665 | 21 S 0244 |
| 14 T 0706 | 07 T 0987 |
| 36 T 0748 | 36 U 0520 |
| 27 U 0142 | 37 U 0933 |
| 30 V 0578 | 20 V 0702 |
| 03 V 0002 | 08 V 0601 |
| 24 W 0908 | 12 W 0167 |
| 21 W 0024 | 37 W 0751 |
| 07 W 0512 | 15 X 0564 |
| 16 X 0283 | 34 X 0732 |
| 05 X 0435 | 32 X 0748 |
| 03 X 0221 | 10 Y 0482 |
| 18 Y 0370 | 07 Y 0002 |
| 33 Y 0697 | 23 Y 0154 |
| 35 Z 0784 | |

(இவையாவும் உறுதிப் படுத்தப்படவேண்டியவை)

ரத நிலையம். தேசிய கொடிகளாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி

திரு. வி. பொன்னம்பலமும் மற்றும் பலரும் வந்திருந்தனர்.

## "வர்க்க வேறுபாடற்ற! புதிய சமுதாயத்தை உருவாக்குவோம்"

உடுப்பிட்டி-புலோலி வியாழன்

'நகரின் அபிவிருத்தி வேலைகளில் உள்ளூராட்சி ஸ்தாபனங்கள் வகிக்கும் பங்கில் சில அடிப்படையான மாற்றங்கள் செய்யப்படும்'

இன்று மாலை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் உதவி அமைச்சருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துப்பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இப்பகுதியின் மின்சாரம், குழாய்நீர் விநியோகம் ஆகிய திட்டங்களுக்கு திரு. பொன். கந்தையா ஆரம்ப திட்டமிட்டார். இதனைப் பல கஷ்டங்களுக்கிடையே முன்னள் உடுப்பிட்டி எம். பி திரு மு சிவசிதம்பரம் நிறைவேற்றிவைத்தார். இத்திட்டங்களுக்குச் செலவிடப்பட்ட பணத்தின் பயன் காலஞ்செல்லத்தான் கிடைக்கும்.

உடுப்பிட்டி எம்.பி. திரு. ஜெயக்கொடி எங்கள் அரசுக்கு ஒத்துழைப்புத் தெரிவித்துள்ளார். வர்க்க இன. மொழி போன்ற பாகுபாடு இல்லாத புதிய சமுதாயத்தை உருவாக்குவதே எமது அரசின் நோக்கமாகும். சிங்கள, தமிழ் மக்கள் ஒன்றிணைந்து செயல்படவேண்டும் வரிகள் சேர்ப்பதில் உள்ளூராட்சித் தலைவர்களுக்குச் சிக்கலான ஆபத்து எதிர் நோக்கியிருக்கிறது. ஆதலால் இவர்கள் மீண்டும் தலைவர்களாக வரமுடியாத நிலை ஏற்படும். இதனல் வரி வசூலிக்கும் பொறுப்பை கைமாற்றி அதிகாரிகளிடத்து ஒப்படைக்கத் திட்டமிட்டுள்ளோம். பின்தங்கிய கிராம சபைகளுக்கு நன்கொடை வழங்க உள்ளூராட்சி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

உடுப்பிட்டி எம். பி. திரு. க. ஜெயக்கொடி தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

நெல்லியடியில் 2 லட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட திட்டத்தின் மின்சார இணைப்பு நிலையத்தை உதவி அமைச்சர் திறந்து வைத்தார். நெல்லியடி மத்திய சந்தையையும் அமைச்சர் பார்வையிட்டார்.

உடுப்பிட்டி எம். பி. திரு. ஜெயக்கொடி நியமன எம். பி. திரு. எம். ஸி. சுப்பிரமணியம் ஆகியோர் சகிதம் உதவி அமைச்சர் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. அ. அ. ஜோசப் நெல்லியடி பட்டினசபை சார்பில் உதவி அமைச்சர் திரு. நீல்டி அல்விசை வரவேற்றார். திரு. வி மராலிங்கம் நன்றி தெரிவித்தார்.

# சிறிமா-சாஸ்திரி ஒப்பந்த அமுலில் முட்டுக்கட்டை!

## தோட்ட முதலாளிமார் மீது தொழில் அமைச்சர் கண்டனம்

கொழும்பு, வியா.

சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதற்கு முட்டுக்கட்டையாக இருப்பதாகத் தொழில் அமைச்சர் திரு. மைக்கேல் சிறிவர்த்தன இன்று தோட்ட சொந்தக்காரர்களைக் குற்றம்சாட்டியுள்ளார்.

தோட்ட முதலாளிமார் சம்மேளனக் கூட்டத்தில் பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கண்டனம் தெரிவித்தார்.

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் விரைவாக அமுல் நடத்தப்படுவதால் இலங்கைப் பிரஜைகளுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்குமென்றும் எத்தனையோ வருடங்களுக்கு முன் செய்யப்பட்ட இந்த ஒப்பந்தம் அமுல்நடாத்தப்படாதிருப்பது கவலைக்குரியதெனத் தெரிவித்த அவர் உள்ளூர் தொழிலாளர்களைத் தோட்டவேலைகளில் போதிய முறையில் பயிற்றுவிக்காமலிருப்பது பற்றியும் தமது அதிருப்தியைத் தெரிவித்தார்

தாயகம் திரும்பும் இந்திய தோட்டத் தொழிலாளர்களின் சேமலாபநிதி மற்றும் இதுசம்பந்தப்பட்ட விஷயங்களில் வீணை தாமதத்தை ஏற்படுத்திவருவது குறித்தும் அமைச்சர் சிறிவர்த்தன தோட்ட முதலாளிகளைப் பெரிதும் குறை கூறினர்.

இவைசம்பந்தமாக தாம் உரிய நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் தோட்டத் தொழிலாளர்கள் நலன் குறித்து உரிய ஒழுங்குகள் செய்யப்போவதாகவும் அமைச்சர் உறுதியளித்தார்.

## இவர்களுக்குக் கடனுதவி

புதுடில்லி, ஆக. 20

இலங்கையிலிருந்தும், பர்மாவிலிருந்தும் இடம்பெயர்ந்து வந்து இந்தியாவில் குடியேறும் இந்திய வம்சாவழியினருக்குக் கடனுதவி அளிக்க இந்தியஅரசு தீர்மானித்துள்ளது.

வியாபாரத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு இந்த உதவி கிடைக்கும், சிறுதொழில் போன்றவற்றில் ஈடுபடுபவர்களுக்கு 5 ஆயிரம் வரையிலான கடனுதவி வழங்கப்படும். வருடமொன்றுக்கு ஐந்தரைவீத வட்டியுடனான இந்தக் கடன் பத்து ஆண்டுத் தவணையில் கொடுக்கப்படும்.

## முகமாலை நற்கருணை நாதர் விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

நாளை மாலை முகமாலை நற்கருணை நாதர் ஆலயத்தில் ஆண்டு விழா நடைபெறவுள்ளது யாழ்ப்பாண மேற்றிராணி ஆண்டகை எமிலியானுஸ்பிள்ளை மாலை நாலு மணிக்கு திருப்பலி பூசையை நிறைவேற்றுவார் அதை அடுத்து நற்கருணை நாதர் பவனி நடைபெறும் யாத்திரிகர்களின் வசதிக்காக கொழும்பு பளை செல்லும் புகையிரத வண்டிகள் முகமாலையில் தரித்துச் செல்ல வசதி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தனிக்கொடி கோரிக்கை

## முதல் மந்திரிகளுடன் ஆலோசித்த பின்னர் முடிவு

### பிரதமர் இந்திரா பதில்

புதுடில்லி, ஆக. 20

தமிழ் நாடு அரசு தனிக்கொடியொன்றைக் கேட்கவில்லை; முதலமைச்சரும் அமைச்சர்களின் கார்களிலும் இல்லங்களிலும் பறக்கவிடுவதற்காக மாத்திரமே ஒரு கொடியைக் கோரி இருக்கிருர்கள் என்று பாரதப் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி இன்று லோக்சபையில் தெரிவுபடுத்தினர்.

தமிழ் நாடு அரசு தனிக் கொடியொன்றைக் கோரியிருப்பதாக வெளியான செய்திகள் பற்றி லோகசபையில் எதிர்க்கட்சியினர் பல கேள்விகளைக்கேட்டனர்

இந்தவிஷயத்தில்விரிவான சிக்கல்கள் இருப்பதாகவும் இதன் எல்லா அம்சங்களும்பரிசிலனை செய்யப்படவேண்டும் என்றும் பிரதம மந்திரி கூறினர்.

எல்லா முதன்மந்திரிகளையும்கலந்து ஆலோசித்த பின் இதுபற்றி முடிவு செய்யப்படும். என்று பிரதமர் கூறினர்.

இது பாரதூரமான விஷயம். ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கும் யோசனை இந்தக் கோரிக்கையை முதல் படியிலேயே நிராகரித்திருக்கவேண்டும்என்று எதிர்தரப்பு அங்கத்தவர்கள் பலர் கூறினர்கள்.

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர்கந்தசாமி கோவில் உற்சவத்தை யொட்டி உரும்பராய் தெற்கில் இந்து இளைஞர் ஆதரவில் அமைக்கப்பட்ட பந்தலில் இன்றிரவு பண்ணிசைக் கச்சேரி நடைபெறும்,

சென்னை காஞ்சிபுர மெய்கண்டாராதீன ஓதுவார் திரு. பி, ஏ எஸ். இராஜசேகரனும் அவரது மாணவர் செல்வன் மா. தங்கராஜாவும் கலந்துகொள்ளும் பண்ணிசைக் கச்சேரியில் திரு இராதாகிருஷ்ணன் ஐ. சிவபாதம் ஆகியோர் பின்னணி வாத்தியம் வாசிப்பர்.

0 0 0

இமையாணன், வெள்ளி

உடுப்பிட்டி மகளிர்கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல் கல்லூரியின் விளையாட்டுமைதானத்தில் நடைபெறவிருக்கிறது. இவ்விளையாட்டுப் போட்டிக்கு வடமாநில வித்தியாதிபதி திரு. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றிபெறும் வீராங்கனைகளுக்குப் பரிசில்களை வழங்குவார்.

## 'பஸ்சேவையை சீர்திருத்துக'

யாழ்ப்பாணம், வெள்ளி

சண்டிலிப்பாய் ஊடாக சங்கானை- யாழ்ப்பாணத்துக்கு செல்லும் பஸ் சேவை மிகமோசமான நிலையிலிருப்பதால்அதனை சீராக்கிபொது மக்களுக்கு வசதி செய்து தரும்படி வேண்டுகின்றோம்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை சங்கானை வளர்மதி மறுமலர்ச்சிச்சங்கம்போக்குவரத்து அமைச்சருக்கு அனுப்பியுள்ளது. அம்மகஜரில் மேலும்குறிப் பிட்டிருப்பவை வருமாறு:-

யாழ்ப்பாணத்துக்கும் மானிப்பாய்க்கு மிடையில் ஒருசேவை (ஓட்ட எண் 66) தொடர்ந்து நாள்முழுவதும் நடைபெறுகிறது. இச்சேவையை இப்போதைய திரும்பிடத்திலிருந்து இரண்டு மைல்களுக்கப்பால் உள்ள சங்கானைக்கு விரிவுபடுத்தலாம். பாடசாலைச்சேவை யெனக் கூறப்படும் மற்றோர் சேவை (ஓட்டஎண்:67)கூட ஒழுங்கின்றி நடைபெறுவதால் மாணவர்களும், ஆசிரியர்களும் மிகவும் சிரமத்துக்குள்ளாக்கப்படுகிறார்கள் இதனல் பல மாணவர்களும் ஆசிரியர்களும் பாடசாலைக்குச் செல்ல முடியாது வீடு திரும்பும் நிலை நாளாந்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## அமைச்சர் பீலிக்ஸ் என்னை அவமதித்து விட்டார்!

### சபையில் வி. என்.

கொழும்பு, வியாழன்

அரசியல் திருத்தச் சட்டமூல விவாதத்தின் மீது பொது நிர்வாக அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தம்மை அவமதிக்கக்கூடிய விதத்தில் பேசிவிட்டாரென்றும். இதனல் மக்கள் மத்தியில் தவருன அபிப்பிராயங்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளதென்றும், இது பற்றி அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் சாவகச்சேரி எம் பி. திரு. வி. என். நவரத்தினம் இன்று ஆட்சிமன்றத்தில் கூறினர்.

"நான் எந்தக்குற்றத்துக்காகவும் சிறைசெல்லவில்லை" ஆனல் உரிமைப்போரில் கலந்துகொண்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கிறேன். இது தவிர வேறு எந்தவிதமான குற்றத்தையும் நான் செய்ததேயில்லை அமைச்சரின் பேச்சு வேதனையளிக்கிறது" என்று திரு. வி. என் நவரத்தினம் உணர்ச்சிவசப்பட்டுப் பேசினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**MANOHARA**
**JAFFNA**
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Pre-Poya, Poya 4 Shows
With Rorycal Houn
in
BLACKSPURS
(Colour)

**REGAL** JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m.
Poya, Pre poya 4 Shows
Frank Sinatra,
Raquel Welch
in
LADY IN CEMENT

## உற்சவம் இல்லை


மாவிட்டபுரம், வியா.

பலாலி அம்மன் ஆலய உற்சவம் இவ்வருடம் நிறுத்தப்பட்டுள்ளது. சென்ற 7ம் திகதி கொடியேற்றம் ஆரம்பமாகஇருந்தது மேற்படி ஆலய உற்சவம் நிறுத்தப்பட்டுள்ளது. ஆலய மூர்த்தி வாலஸ்தானம் செய்யப்பட்டுள்ளது.

ஆலய கொடியேற்றத் தினத்தன்று ஆலயப் பிரவேசம்செய்ய பரிபாலர்க்கு கோரிக்கை விடுத்ததையடுத்து ஆலய உற்சவத்தை நிறுத்துவதென பரிபாலகர்கள் முடிவு செய்துள்ளனராம்.

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி
நாகேஷ்—ஜெயந்தி
நடித்த
**இரு கோடுகள்**

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை
**வெலிங்டன்** யாழ்ப்பாணம் திரைகளில்
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும்
தெய்வத் தமிழ்க் காவியம்'
**தலைவன்**

# "காலஞ்சென்றவர் கோகிலாதேவிக்குக் கடிதம் கொடுத்ததாக ஆசிரியர் சொன்னார்"

## முல்லைத்தீவு பஸ்கண்டக்டர் கொலைவழக்கில் சாரதி சாட்சியம்

முல்லைத்தீவு, வியாழன்

"கோகிலாதேவி என்னும் மாணவியை எனக்குத் தெரியும். அவர் வழமையாக பஸ்ஸில் பிரயாணம் செய்வர். ஆனால் காலஞ்சென்றவருக்கும் கோகிலாதேவிக்குமிடையே காதல் இருந்தது எனக்குத் தெரியாது, ஆனால் கோகிலாதேவிக்கு காலஞ்சென்ற கண்டக்டர் கடிதம் கொடுத்ததாக பாடசாலை ஆசிரியர் தியாகராசா என்னிடம் சொன்னார்."

முல்லைத்தீவு பஸ் கண்டக்டர் துரைராசாவின் கொலை வழக்கு நேற்று முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நீதிபதி திரு. கே. ஜீ. திசநாயக்கா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோது சாட்சியமளித்த பஸ் சாரதியான ஜனாப் எஸ். யூ. முகமதலி பொலிஸ் இன்ஸ்பெக்டரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு சொன்னார். இவ்வழக்கைப் பார்ப்பதற்கு என்றுமில்லாதவாறு நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் மக்கள் ஏராளமாகத் திரண்டிருந்தனர்.

இவ்வருடம் ஜூன் 8-ந் திகதி இரவு குமுளமுனையில் வைத்துமுல்லைத்தீவுஇ.போ. சபையைச் சேர்ந்த கொண்டக்டர் துரைராசா என்பவரைக் கொலை செய்ததாக குமுளமுனையைச் சேர்ந்த மயில்வாகனம் தியாகர சா, வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம் ஆகியோர்மீது குற்றம் சாட்டி இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. ஸி., அட்வகேட் திரு. அரசுவால்டனின் உதவியுடனும், புறக்டர் எஸ். சிறீதரனின் அனுசரணையுடனும் ஆஜரானர்.

வவுனியா பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. டயஸ் வழக்கை நடத்தினார். துரைராசா கொலை செய்யப்பட்ட தினம் அவர் கடமை புரிந்த அதே பஸ் சாரதியான எஸ். யூ. முகம்மதலி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவ தினத்தன்று நான் இ. சி. 2747 இலக்க பஸ்ஸில் சாரதியாகக் கடமை செய்தேன். என்னோடு அதே பஸ்ஸில் கண்டக்டராகக் காலஞ்சென்ற துரைராசா கடமை செய்தார் அன்று இரவு 10-30 மணிக்கு முல்லைத்தீவிலிருந்து நான் பஸ்ஸைக் கொண்டு குமுளமுனைக்குப் புறப்பட்டேன். இரவு 11 15 மணிக்கு குமுளமுனையை அடைந்து அங்கு வழக்கமாக நிற்பாட்டும் இடமான சின்னப்பிள்ளை என்பவரின் தேநீர்க்கடை முன் பஸ்ஸை நிறுத்தினேன்.

வழமைபோலவே நாம் பஸ்சில் ஏறிப் படுத்தோம். நான் பின் ஆசனத்திலும் காலஞ்சென்ற கண்டக்டர் துரைராசா இருபக்கத்திலுமுள்ள ஆசனங்களுக்கு நடுவிலும் முன் பக்கத்திலுள்ள ஆசனத்தில் கமலகாந்தன் என்பவரும் படுத்திருந்தோம்இரவு 12-45 மணிக்கு கமலநாதன் என்னை எழுப்பி ஏதோசத்தம் கேட்பதாகக் கூறி லைட்டை அடிக்கும் படி [illegible]னார். நான் உடனே லைட்டை அடித்துக் காலஞ்சென்றவரைஎழுப்பிப்பார்த்தேன்எழும்பவில்லை. அவர் மூச்சுவிட முடியாதபடி இருந்தார். உடனே அவரை முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லத் தீர்மானித்து பஸ்சை எடுத்துச் செல்லும்வழியில் சாரதி நல்லையாவைக் கணுக் கேணியில் சந்தித்தேன். பின்பு அவர் பஸ்சில்வந்து கண்டக்டரை பார்த்தார், பின்பு சாரதி ஆசனத்தில் இருந்த என்னிடம் அவர் இறந்துவிட்டார் என்றார் வழியில்வந்த சாரதி ஆறுமுகத்தையும் ஏற்றிக்

(4-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30மணி
போயா, பிரிபோயா 2-30
எம்.ஜி.ஆர்.— சாவித்திரி
நடித்த
**மகாதேவி**

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர் — விஜயலட்சுமி
நடித்த
**உயிர் மேல் ஆசை**

இன்று மட்டும்
**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 21—8—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 பண்ணாரிந்தமிழ், 8 00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள்.

இரவு6-00லயவின்யாசம், 6-30 கிராமியப்பாடல்கள், 7-00 திரைகானம், 7-15 வயலினிசை, 7-45 ஐ. நா. சித்திரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40வயலின், 10-30 செய்தித்தொகுப்பு.

## சங்கானைப் பட்டினசபை கேள்வி அறிவித்தல்

1970-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 29-ம் திகதி நண்பகல் 12மணிவரை சங்கானைப் பட்டினசபைத் தலைவரால் "பிளாக் வீதி-சட்டம்பியார் வீதி பக்கக் கான் கட்டுதல்" வேலைக்கான கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் ஒவ்வொன்றுக்கும் கேள்விப்பிணையாக ரூபா 50/-ம், கேள்விப்பத்திர விலையாக ரூ ா 5/-ம் செலுத்தியதின் பெயரால் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் 1970-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28-ம் திகதி நண்பகல் 12 00மணிவரை வழங்கப்படும். விண்ணப்பங்கள் உத்தியோகபூர்வமான பத்திரங்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும், மற்றும் விபரங்களைப் பட்டின சபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

சி. வயிரமுத்து,
தலைவர்.
பட்டின சபை,
சங்கானை.

பட்டின சபை,
அலுவலகம்,
சங்கானை.
18-8-1970 2415

## முக்கிய அறிவித்தல்

இன்றுவரை வலி. கிழக்கு ப. நோ. கூ. ச சமாசத்தில் பதிவுசெய்யாத சமாச எல்லைக்குட்பட்ட வியாபாரிகள் கவனிக்கவும்: காலம் தாழ்த்தாது உங்கள் வியாபாரஅனுமதிப்பத்திரத்தை சமாசக்கந்தோரில் காட்டிப் பதிவு செய்து கொள்ளவும்.

அரசாங்கத்தின் புதிய உணவு விநியோகத் திட்டத்தின் கீழ், எந்தக் கடைக்காரரும் சமாச மூலமே தனக்குத் தேவையான விற்பனைப் பொருளைப் பெறமுடியும்.

பதிவு செய்யும் கடைசித் திகதி 26-8-70.

தலைவர்,
வலி.-கிழக்குப் ப, நோ.
கூ. ச. சமாசம்.

நீர்வேலி.
18-8-70 2414

## திருகோணமலை நகராண்மைக் கழகச் சோலை வரி விளம்பரம்

பேரன்புமிக்கப்பெரியோர்களே!

நகராண்மைக்கழகத்தின் நிதிநிலைமையினையும், மக்களின் சுபீட்ச வாழ்வையும் கருத்திற் கொண்டு, உள்ளூராட்சி ஆணையாளரின் வேண்டுகோளுக்கிணங்கபின் வருவனவற்றை நகராண்மைக்கழகத் தலைவர் என்ற முறையில் நகரவாழ் வரியிறுப்பாளர் அனைவரினதும் கவனத்திற்குக் கொண்டுவர விழைகின்றேன்.

ஆணையாளரால் திருகோணமலை நகராண்மைக்கழகம், சட்டவிதிகளுக்கமைய குறிப்பிட்ட காலஎல்லைக்குள் அவ்வக் கந்தாயத்திற்குரிய வரிப்பணங்கள் யாவும் அறவிடப்படாதிருப்பதாகவும், சபையினால் கால எல்லைகள் நீடிக்கப்பட்டு வருவதால், வரிப்பணம் யாவும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் அறவிடப்படாதுநிலுவையாக இருப்பதாகவும், சபையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதால், பேரன்புமிக்கவரியிறுப்பாளர் அனைவரையும் மேலும் காலஎல்லைகள் நீடிக்கப்படாதவாறு கீழ்க்குறிப்பிட்ட கால எல்லைக்குள் அல்லது அதற்கு முன்னதாக வரிப்பணத்தினைச் செலுத்துமாறு மிகவும்பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

1970-ம் ஆண்டு இரண்டாம் கந்தாயம். - 30-9 70.
1970-ம் ஆண்டு மூன்றும் கந்தாயம். - 31-10-70.
1970-ம் ஆண்டு நான்காம் கந்தாயம். - 31-12-70.

மேலும் சென்ற ஆண்டுகட்கும் செலுத்தப்படாதிருக்கும் பாக்கிப் பணங்களையும், காலதாமதமின்றி அறவிடும்படியும். அவ்வாறு செய்யத்தவறும் பட்சத்தில் ஆதனங்களைப் பறிமுதல் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்குமாறும் ஆணையாளரால் நான் பணிக்கப்பட்டுள்ளேன்.

ஆகவே, நகரின் பாதுகாவலாளராகிய நீவீர் அனைவரும் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்கு இடமளிக்காது கூடிய விரைவில் நிலுவைப் பணங்கள் முழுவதையும் செலுத்தி உங்கள் கழகத்தின் கௌரவத்தையும், நற்பெயரையும் பாதுகாக்குமாறு மிகப்பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

(சி. சிவானந்தம்)
தலைவர்,
நகராண்மைக்கழகம்,
திருகோணமலை.

நகராண்மைக் கழகப் பணிமனை,
திருகோணமலை,
13-8-70. 2416



## கலைஞர் ஜே.பி.ஆனார்

யாழ்ப்பாணம்,வியா


யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த பிரபல தொழிலதிபரும், சமூக சேவையாளருமான திரு பி. எஸ். சின்னத்துரை யாழ்ப்பாணப் பகுதிக்குச் சமாதான நீதிபதியாக நீதியமைச்சர் திரு, ஜெயமானேயினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்,

இவர் பலதரப்பட்ட சமய சமூக கலாச்சார இயக்கங்களில் பங்குகொண்டு உழைத்து வருபவராவார் வடபகுதியின் சிறந்த கலைஞர்களில் ஒருவராக விளங்கும் இவர் புதிய அரசாங்கம் பதவியேற்றதும் யாழ் மாவட்டத்தில் முதலாவது ஜே பி பட்டம்பெற்ற பெருமைக்குரியவர், (உடுப், நிரு)

---

தாவடி, புதன்

'தாவடி ஸ்ரீகணேச வாசிகசாலையில் சைவ இளைஞர் சார்பில் தினமும் மாலையில் திரு சி.சின்னத்தம்பி 'கந்தபுராண பாராயணம்' செய்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும்
தெய்வத் தமிழ்க் காவியம்'

# துணைவன்

கதை வசனம்
பாலமுருகன்

சங்கீதம்
K.V. மகாதேவன்

தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்

இன்று மட்டும்

**வெஸ்லிசினிமா**

மானிப்பாய்

தினசரி: 6.30, 9.30

சிவாஜி—கே. ஆர். விஜயா
நடித்த

**ஊட்டி வரை உறவு**
(ஈஸ்ட்மன் கலர்)

## 21-8-70 இன்றுமுதல் குதூகலஆரம்பம்

சர்வதேச திரைப்பட அரங்கில் பாராட்டுப்பெற்ற படம், தென்னகத்திரைகளில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச்சித்திரம்.

நாணயம் சுண்டப்பட்டு மேலே போகிறது. அது கீழே விழும்பொழுது நீங்களே பார்த்துவிட்டுச் சொல்லுங்கள்

பூ வா — த லை யா?

## யாழ்-வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன் ★ ஜெய்சங்கர்
நாகேஷ் ★ எம். ஆர். ஆர். வாசு
ஸ்ரீ காந்த் ★ எஸ். ராமராவ்
ராஜஸ்ரீ ★ வெண்ணிறஆடை நிர்மலா
குமாரி சச்சு ★ மனோரமா ★ வரலட்சுமி
நடித்த

★ கே. பாலசந்தரின் ★

# பூவா தலையா

திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
கே. பா ல ச் ச ந் த ர்

பாடல்கள்
வா லி

இசையமைப்பு
எம். எஸ். விஸ்வநாதன்

... சென்றவரைஎழுப்பிப்பார்த்தேன்எழும்பவில்லை. அவர் மூச்சுவிட முடியாதபடி இருந்தார், உடனே அவரை

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

ஆதனம்:
யாழ்ப்பாணம் சுண்டிக்குளி காட்டு இலாகா கிழக்கு ஒழுங்கை கச்சேரிக்கு அண்மையில் ஐந்து லாச்சம் வீடு கட்டக்கூடிய காணி முழுதாக அல்லது இரு துண்டுகளாகப் பிரித்து விற்கப்படும். "லான்ட் இன்வெஸ்ற் மென்ட், 6, பிரதானவீதி. யாழ்ப்பாணம்." 3076

கொக்குவில் சம்பியன் ஒழுங்கையில் வீடுகள் கட்டுவதற்கேற்ற பதினெரு பரப்பு நிலம் உடனடியாக விற்பனைக்குண்டு. காங்கேசன்துறை வீதியிலிருந்து நூறு யார் தூரத்திலுள்ளது. முழுதாகவோ துண்டுகளாகவோ பிரித்து விற்கப்படும். "லான்ட் இன்வெஸ்ட் மென்ட்", 6, பிரதானவிதி, யாழ்ப்பாணம். 3075

வீடும், வளவும்:
சங்கானை பிளாக்ரேட்டில் மின்சார வசதிகளுடன் வீடும், பிரயோசனத்துடன்4பரப்பு வளவும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. A. முத்தையா, பிளாக்ரேட், சங்கானை. 3069

பொன்னையா கைம்பெண் இராசம்மாவின் 1 1/2பரப்பு காணியும் கல்வீடும், பிரயோசனத்துடன் ஸ்டேசன் ரோட் சாவகச்சேரியில் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும்' S. P. ராசரட்டினம், தபால் கந்தோர் ரோட், மானிப்பாய். 3077

### தேவை


பொதுத் தராதரப்பத்திரம் வரை ஆங்கிலம், சிங்களம், கணிதம், விஞ்ஞானம் முதலியவை கற்பிக்க ஆசிரியர் தேவை. தராதரம், அனுபவம், வயது முதலியவற்றுடன் இருபாலாரும் உடன் விண்ணப்பிக்கவும். தங்குவதற்கு வசதியுண்டு கி. அம்பலவாணர், 60, அரசடி வீதி. யாழ்ப்பாணம். 3074

அனுபவம் மிக்க தையல் தொழிலாளி உடன் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். K. P. நாயர், யாழ் தியேட்டர் முன்புறம், காங்கேசன்துறை. 3070



பயிர்த் தொழிலின் அதிசய
கண்டுபிடிப்பு ....

## 'அல்கதீன்' குழாய்




CIC கெமிகல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிற்றெட்.
தபால் பெட்டி 352 - கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் புகார்கள் பற்றி எகிப்து, சோவியத் அரசுகளிடம் அமெரிக்கா விளக்கம் கோருகிறது

## போர் நிறுத்த மீறலை நிரூபிக்க இஸ்ரேலுக்கு முடியுமாம்

நியூயோர்க், ஆகஸ்ட் 20

போர் நிறுத்தத்தை எகிப்தியர் மீறிவிட்டதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள்பற்றி அமெரிக்கா சோவியத் யூனியனிடமும் ஐக்கிய அரபுக் குடியரசிடமும் விளக்கம் கோரியிருக்கின்றது.

போர்நிறுத்த ஏற்பாடுகளை எகிப்தியர் மீறிவிட்டார்கள் என்பதை நிரூபிப்பதற்கான தீர்க்கமான சாட்சியங்கள் எதுவும் கிடையாதென அமெரிக்கா கருதிய போதிலும் இஸ்ரேலியரின் புகார்கள் குறித்து அமெரிக்கா உண்மையாகவே கவலை கொண்டிருப்பதின் காரணமாகவே இவ்விஷயம் சம்பந்தமாக மேற்படி இருநாடுகளிடமும் விளக்கம் கோரியிருப்பதாகத் தெரிகின்றது.

மாஸ்கோவில் உள்ள அமெரிக்க தூதுவர் சோவியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசியிருக்கிறார். வாஷிங்டனில் அமெரிக்க ராஜாங்க அமைச்சின் உதவி மந்திரி திரு. சிஸ்கோ சோவியத், எகிப்திய தூதுவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

### நிரூபிக்க சாட்சியம் உண்டு

இதற்கிடையில் எகிப்தியர் போர் நிறுத்த ஏற்பாடுகளை மீறியிருக்கிறார்கள் என்பதை நிரூபிப்பதற்கு வேண்டிய தகுந்த ருசுக்கள் தங்களிடமிருப்பதாக இஸ்ரேல் உதவி பிரதம மந்திரி திரு. அலொன் தெரிவித்திருக்கின்றார். சூயல்காஸ்வாய்ப் பிரதேசத்தில் எகிப்தியர் ஏவாயுதத் தளங்களை அமைத்து வருவதைக் காட்டும் புகைப்படங்கள் டெல்அவிவ்வில் வெளியிடப்பட்டுள்ளன. போர் ஓய்வு ஏற்படுவதற்கு முன்பும் பின்பும் இப்படங்கள் எடுக்கப்பட்டவையாம்

ஜோர்டான் மன்னர் ஹுசேன் கெய்ரோ வந்திருக்கிறார். மேற்காசிய அமைதிக்கு இரு நாடுகளும் ஒருமித்து நடவடிக்கைகள் எடுப்பது குறித்து இவர் நாஸருடன் பேசுவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய அரபுக் குடியரசில் ஈராக்கியர்கள் மீது கொமாண்டோக்கள் வன்முறை புரிவதாகக் கூறப்படுகின்றது. சிலர் கடத்திச் செல்லப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. ஈராக்கில் எகிப்தியர் இடைஞ்சல்களுக்காளக்கப்படுவதாக எகிப்து குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐ. நா.வில் உள்ள நான்கு வல்லரசுகளின் பிரதிநிதிகளும் நேற்று மேற்காசிய அமைதி பற்றி ஆலோசனைகள் நடத்தினார்கள். செப்டம்பர் மாதம் 2ந் திகதி மீண்டும் கூடிப் பேசுவதென்றும் அவர்கள் முடிவுசெய்துள்ளனர்.

### அரபுக்களின் 4 சடலங்கள்

இஸ்ரேலியர் வசமுள்ள காஸாப் பகுதியில் அரபுக் கொரில்லாக்கள் 4 பேரின் சடலங்கள் கிடந்ததாக இஸ்ரேலியர் அறிவித்துள்ளனர். இரண்டு கொரில்லாக் கோஷ்டிகளுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் இவர்கள் கொல்லப்பட்டிருக்கலாமென்று தெரிவிக்கப்பட்டது

## வியாபாரி தற்கொலை

திருச்சி, ஆகஸ்ட் 20

திருச்சி தாத்தையங்கார் பேட்டைக்கு அருகில் உள்ள மேட்டுப்பாளையத்தில் வசிக்கும் வளையல் வியாபாரி ஒருவர், கடன் தொல்லை, பணக்கஷ்டம் காரணமாக வாழ்க்கையில் வெறுப்பு அடைந்து தற்கொலைசெய்து கொண்டார்.

இவர், கிருமிநாசினியைப் பாலில் கலந்து தனது 3 புத்திரிகளுக்குக் கொடுத்து, தானும் அருந்தி, நால்வரும் ஒரே நாளில் பிணமாயினர் பஞ்சாயத்தார் தற்கொலை எனத் தீர்ப்புக் கூறினர்.

## செனட்டில் நிக்ஸனுக்கு ஆதரவு

நியூயோர்க், ஆக 20

ஏவாயுத எதிர்ப்புத்தளங்களை விஸ்தரிப்பதற்கான திட்டமொன்றை அமெரிக்க செனட்சபை அங்கீகரித்திருக்கின்றது. ஏவாயுத எதிர்ப்புத் தளங்கள் விஸ்தரிக்கப்படுவதைத் தடைசெய்ய வேண்டும் என்று சில செனட்டர்கள் சமர்ப்பித்த பிரேரணையொன்றை செனட்சபை நிராகரித்துவிட்டது. இது அதிபர் நிக்ஸனின் கொள்கைக்கு கிடைத்த பெரிய வெற்றியென்று பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.

## காரியாதிகாரிக்கு மகஜர்

சுழிபுரம், வியாழன்

வலிகாமம் மேற்கு விளையாட்டுக்கழகங்களின் இரண்டாம் பிரிவின் வருடாந்த விளையாட்டுப் போட்டியை சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடாத்துமாறு வலிகாமம் மேற்குக் காரியாதிகாரியை சுழிபுரம் சூட்டிங் ஸ்டார் கோஷ்டியினர் மகஜர் மூலம் கேட்டுள்ளனர். வலிகாமம் மேற்கில் சகல வசதிகள் நிறைந்த ஒரு மைதானம் இதுவே எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வித்தியோதய

## ஊழலை விசாரிக்க குழு நியமனம்

கோட்டை, வியாழன்

வித்தியோதய பல்கலைக்கழக ஊழல்கள் பற்றி ஆராய மூவர்கொண்ட விசாரணைக் குழுவொன்றைக் கல்வியமைச்சர் ஜனாப் பதியுதீன் மஃமூத் நியமித்துள்ளார்.

மாணவர்களிடையே உள்ள ஒழுங்கற்ற முறைகள், அவர்களிடையே உள்ள பிரச்னைகள் பற்றி ஆராயும் இக்குழு, தனது அறிக்கையை ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இக்குழுவுக்குச் சட்டக்கல்லூரியைச் சேர்ந்த திரு. ஆர். கே. டபிள்யூ குணசேகரா தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். பத்திரிகைத் துறையைச் சேர்ந்த எம். ஏ. டி. சில்வாவும் இக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஆலய மணிக்கோபுரம்

திருநெல்வேலி, வெள்ளி

நீராவியடிப் பிள்ளையார் கோயில் மணிக்கோபுரவேலைகள் மிகவும் துரிதமாக நடைபெற்றுவருகின்றன. பல நாட்களாக அரைகுறையாக விடப்பட்டிருந்த இக்கோபுரம் தற்போது ஆலய நிர்வாகியின் முயற்சியினால் கட்டப்பட்டுவருகிறது இன்னும் சில தினங்களில் மணிக்கோபுர வேலைகள் பூரணமாகப் பூர்த்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## ஸ்ரீலங்கா ஜாதிக சங்கக்கிளை

பருத்தித்துறை, வியா.

ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்க வடமராட்சிக் கிளையின் அங்குராார்ப்பணக் கூட்டம் இம்மாதம் 21-ம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

## இரு மொழிகளிலும் தனித்தனி நடைபெறும்

உடுவில், வியாழன்

இலங்கையிலுள்ள சகல வர்த்தக ஆசிரியர்களினுடைய வருடாந்த விடுமுறை கால பயிற்சி வகுப்புகள் இம் முறை கண்டியில் நடைபெறும்.

கண்டி உயன்வத்தை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இம்மாதம் 23ம் திகதி ஆரம்பமாகும் மேற்படி பயிற்சி வகுப்புகளுக்கு சமுகமளிக்குமாறு பிரதம வர்த்தகக் கல்வி அதிகாரி திரு சி ஏ. எம். கெக்குலாவல நாட்டின் சகல வர்த்தக ஆசிரியர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

கல்வி மா அதிகாரியும், கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியுமான டாக்டர் பிரேமதாச உடுகம இம் மாதம் 23ம் திகதி மாலை நான்கு மணிக்கு மேற்படி பயிற்சி வகுப்புகளை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைப்பார்.

பயிற்சி வகுப்புகள் இம்முறை சிங்களத்திலும், தமிழிலும் தனித்தனியாக நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

## பஸ் பாதைக்கு வேண்டுகோள்

பருத்தித்துறை, வியா

பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய இடங்களுக்குச் செல்லும் பஸ் வண்டிகளிற் சில நெல்லியடி ஊடாக கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிவீதி வெல்லன் விநாயகர்வீதி, சம்பந்தர் கடை வீதியூடாகச் செலுத்தப்பட வேண்டும் என்றும் அதன் மூலம் பாடசாலை மாணவர், வியாபாரிகள் ஆகியோர் பயனடைய முடியுமென்றும் தெரிவிக்கும் மகஜர் ஒன்றைக் கரவெட்டி பிரயாணிகள் சங்கம் மேலதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளது.

## பொன். கந்தையா தினம்

பருத்தித்துறை, புதன்

அடுத்தமாதம் 8ம் திகதி கரவெட்டிப்பகுதியில் நடக்கவிருக்கும் அமரர் பொன். கந்தையா நினைவு தினத்தையொட்டி மூன்று அமைச்சர்கள் வடபகுதிக்கு வருகைதருவதாகத் தெரிகிறது. அமைச்சர்கள் திருவாளர்கள் பீட்டர் கெனமன், கொல்வின் ஆர். டி. சில்வா, மைத்திரிபால சேனநாயக்கா ஆகியோர்கள் சிறப்புச் சொற்பொழி வாற்றுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

காவேரி தண்ணீர் பங்கீடு

# கருணாநிதி யோசனைக்கு மைசூர் முதல்வர் மறுப்பு

புதுடில்லி, ஆகஸ்ட் 20

**காவேரி ஆற்றுநீர்பங்கீடுசம்பந்தமாக மைசூருக்கும் தமிழ்நாட்டுக்கு மிடையிலான பிரச்னையை நடுவர் தீர்ப்புக்குவிடவேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்த யோசனையை மைசூர் முதல்வர் திரு. வீரேந்திர பாட்டீல் நிராகரித்து விட்டதாகத் தெரிகின்றது.**

இந்தப் பிரச்னை குறித்து ஏற்கனவே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளினால் எதுவித பயனும் இல்லாது போனதால் இதில் பிரதம மந்திரி தலையிட்டு பிரச்னை பற்றி தீர்ப்புக்கூற நடுவர் சபையொன்றை நியமிக்க வேண்டும் என்று திரு. கருணாநிதி கேட்டிருந்தார். ஆனால் இரு மாநிலங்களின் முதல்வர்களும் இன்னொரு தடவை சந்தித்துப் பேசலாம் என்று மத்திய நீர்ப்பாசன அமைச்சர் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் மைசூர் முதல்வருக்கு யோசனை தெரிவித்திருந்தார். இந்த யோசனையையும் திரு வீரேந்திரபாட்டீல் நிராகரித்துவிட்டார்.

முதலில் இரு மாநிலங்களின் தலைமை பொறியியலாளர்களும் சந்தித்துப் பேசி தண்ணீர்ப் பங்கீடு சம்பந்தமான நுட்பங்களைப் பேசி முடிக்கவேண்டும் என்றும் அதன் பின்னர் முதல்வர்கள் மீண்டும் சந்தித்துப் பேசலாம் என்றும் திரு. பாட்டீல் யோசனை கூறியிருக்கிறார்.

### தண்ணீர் விநியோகம்

இதேசமயம் மைசூர் அணையிலிருந்து தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் திறந்துவிடுவதைக் குறைப்பதற்கு முயற்சி எடுக்கப்படுவதாகத் தெரிகின்றது. இது சம்பந்தமாக ஆராய மைசூர் அரசாங்கம் நிறுவியிருந்த குழு தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் விடுவதைக் குறைக்கவேண்டும் என்று சிபார்சு செய்துள்ளது. அந்தச் சிபார்சில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'மைசூரிலுள்ள கிருஷ்ணராஜசாகர் அணைக்கட்டில் தண்ணீர் போதியளவு இல்லை. அதனால் இந்த அணையிலிருந்து தமிழ்நாட்டுக்கு காவேரி ஆற்றில் தண்ணீர் திறந்துவிடுவதைக் குறைக்கவேண்டும். இல்லையென்றால் மைசூரிலுள்ள நெற்பயிர்களும் கரும்புப் பயிர்களும் பாதிக்கப்படும்'' இதுபற்றி மைசூர் அரசு பரிசிலனை நடத்திவருகின்றது

மாஸ்கோவில்

# 'வார்ஸோ' ஒப்பந்த நாட்டுத் தலைவர்கள் மாநாடு

மாஸ்கோ, ஆக 20

வார்ஸோ ஒப்பந்த நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் மாஸ்கோவில் நடைபெறும் மாநாட்டுக்கு வந்து சேர்ந்துள்ளார்கள். இத்தலைவர்களை சோவியத் பிரதம மந்திரி திரு. கொஸிஜினும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பிரஸ்னேவும் மாஸ்கோ விமான நிலையத்தில் வரவேற்றனர்.

வார்ஸோ ஒப்பந்த நாடுகளின் இந்த மாநாட்டில் சோவியத் தலைவர்கள் சமீபத்தில் மேற்கு ஜெர்மன் அரசாங்கத்துடன் செய்துகொண்ட வன்முறை தவிர்ப்பு ஒப்பந்தம் சம்பந்தமாகவிளக்குவார்களென்று கருதப்படுகின்றது. விசேஷமாக கிழக்கு ஜெர்மன் தலைவர்களுக்கு இந்த ஒப்பந்தம் பற்றி பூரணவிளக்கம்கொடுக்கப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐரோப்பிய பாதுகாப்பு சம்பந்தமாக ஒப்பந்தம் ஒன்று ஏற்படவேண்டும் என்று இந்த நாடுகள் ஏற்கனவே தெரிவித்த கருத்தை மீண்டும் இந்த மாநாட்டில் வலியுறுத்தக்கூடும் என்று தெரிகின்றது.

## 'மூன்று காங்கிரஸ்களும் ஒரே மரத்தின் கிளைகள்'

### ஏ. கே. கோபாலன் விமர்சனம்

சென்னை, ஆக.20

கேரளாவின் உள்ள சிண்டிகேட் காங்கிரஸ், இந்திரா காங்கிரஸ், கேரளகாங்கிரஸ் ஆகிய மூன்று காங்கிரசகளும் ஒரேமரத்திலுள்ள 3 கிளைகள்தான் அவை மூன்றும் பிற்போக்குத்தனமானவை எனவே இவைகளோடு நாங்கள் உறவுவைத்துக் கொள்ளமாட்டோம்.

இவ்வாறு இடதுசாரிக்கம்யூனிஸ்ட் கட்சித்தலைவரும் [illegible] யும், வலது கம்யூனிஸ்ட் கூட்டணியையும் எதிர்த்துப் போராடுவோம் என்று கூறினார்.

கூட்டுறவுத்துறை

## அபிவிருத்திபற்றி ஆராயக் குழு

கோட்டை, புதன்

கூட்டுறவுத்துறைஊழியர்கள் அபிவிருத்தி பற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத்தில் எகிப்தியர் ஏவா யுதத் தளங்களை அமைத்து வருவதைக் காட்டும் புகைப் படங்கள் டெல்அவிவ்வில் வெளியிடப்பட்டுள்ளன. போர் ஓய்வு ஏற்படுவதற்கு முன்பும் பின்பும் இப்படங்கள் எடுக்ப்பட்டவையாம்

மேட்டுப்பாளையத்தில் வசிக்கும் வளையல் வியாபாரி ஒருவர், கடன் தொல்லை, பணக்கஷ்டம் காரணமாக வாழ்க்கையில் வெறுப்பு அடைந்து தற்கொலைசெய்து கொண்டார்.

இவர், கிருமிநாசினியைப் பாலில் கலந்து தனது 3 புத்திரிகளுக்குக் கொடுத்து, தானும் அருந்தி, நால்வரும் ஒரே நாளில் பிணமாயினர் பஞ்சாயத்தார் தற்கொலை எனத் தீர்ப்புக் கூறினர்.

ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்க வடமராட்சிக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் இம்மாதம் 21-ம் திகதி நெல்லியடிமத்திய மகாவித்தி[illegible]ய மண்டபத்தில் நடைபெற விருக்கிறது.

ச்சர்கள் திருவாளர்கள் பீட்டர் கெனமன், கொல்வின் ஆர். டி. சில்வா, மைத்திரிபால சேனநாயக்கா ஆகியோர்கள் சிறப்புச் [illegible]ற்பொழி வாற்றுவார்க[illegible]ன எதிர்பார்க்கப்பகிறது.

தமாகவிளக்குவார்களென்று கருதப்படுகின்றது. விசேஷமாக கிழக்கு ஜெர்மன் தலைவர்களுக்கு இந்த ஒப்பந்தம் பற்றி பூரணவிளக்கம்கொடுக்கப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# 8 வயதுக் கண்மணியின் பரிதாப நிலை

அம்பன், வியா.

நாகர் கோயில் வடக்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கண்மணி என்ற எட்டு வயதுச் சிறுவனைப் பெரியதொரு பிரச்னை எதிர்நோக்கியிருக்கிறது. அவரது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் ஏற்பட்டுள்ள தவறு காரணமாக கண்மணி பாடசாலையில் சேர்ந்து கல்வி பெற முடியாத நிலையிலுள்ளார். விதவையான கண்மணியின் தாய் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போதிலும் எவ்விதபயனும் ஏற்படவில்லையென நமது நிருபரிடம் தெரிவித்தார்.

கண்மணியின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் ஏற்பட்டுள்ள பால் மாற்றமே அவருக்கு ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலைக்குக் காரணமாகும் கண்மணி ஆண்பிள்ளையாயிருந்த போதிலும் அவரது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் பெண் என்றே பதியப்பட்டிருக்கிறதாம். இதன் காரணமாக எந்தப் பாடசாலையிலும் கண்மணியைச் சேர்த்துக் கொள்ள முடியாதிருக்கிறதாம்.

வெலியாத்து உத்தியோகத்தரை

# பொலிசார் முன்னிலையில் தாக்கியதாக வழக்கு

வல்வெட்டித்துறை, வியா

'நான் நீதிமன்ற உத்தரவின்படி குறிப்பிட்டகாணிக்குள் ஆட்சிஎடுத்துக்கொடுக்க சென்றசமயம் 1-ம் எதிரி காணியின் வாசலில் நின்று இருகைகளாலும் தடுத்தார். நான்நீதிமன்றத்தினால்வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரத்தை எதிரிக்கு வாசித்துக்காட்டி உள்ளேபோகத்தான் வேண்டுமென்று சொல்ல எதிரி எனது தலையில் பிடித்துக்கொண்டு நெஞ்சில்இருதரம் இடித்தார். நான் உடனே நிலத்தில் விழுந்துவிட்டேன்' என உடுப்பிட்டி கோவில்பற்று வெலியாத்து உத்தியோகத்தரானவேலுப்பிள்ளை செல்லையா என்பவர் பருத்தி துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு, உடுப்பிட்டியைச்சேர்ந்தவே. தங்கவேலு தேவராசா, துரையன், அகமலர், வே. சின்னப்பிள்ளை ஆகிய ஐவரும் கடந்த தை மாதம் 24ந் திகதி வெலியாத்து உத்தியோகத்தரான வே. செல்லையாவைப் பயமுறுத்தி, பலாத்காரம் பாவித்து, காயப்படுத்தியதாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டது.

செல்லையா தொடர்ந்து சாட்சியமளிக்கையில்:- சம்பவநாள் நான் பருத்தித் துறை டிஸ்திறிக் நீதிமன்ற உத்தரவின்படி உடுப்பிட்டியைச்சேர்ந்த முருகன்ஏரம்பு என்பவருக்கு ஆட்சி எடுத்துக்கொடுப்பதற்காகநானும் வல்வெட்டித்துறைபொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்களுமாக குறிப்பிட்ட காணிக்குச்சென்றபோது 1-ம் எதிரி காணியின் வாசலில் நின்று தடுத்தார். நான் எடுத்துச் சென்ற பத்திரத்தைவாசித்துக்காட்டி உள்ளே போகத்தான்வேண்டுமெனச் சொன்னேன். எதிரி என்னைத் தாக்கினர். அருகில்நின்றபொலிசார் அப்பொழுதுஎதிரியைக் கைதுசெய்தனர். அதைத் தொடர்ந்து மற்ற எதிரிகளும் ஆயுதங்களுடன் அவ்விடத்திற்கு வந்து குழப்பம் செய்தனர். அங்கு நின்ற பொலிசார் உடனேவல்வை பொலிஸ்நிலையத்துக்குத் தகவல் கொடுக்க பொலிசார் ஜீப்பில் ஸ்தலத்திற்கு வந்தனர். 1-ம் எதிரியைத் தவிர மற்ற எல்லா எதிரிகளையும் அவ்விடத்தில்வைத்து கைது செய்தனர். பின்னர் நான் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றுவாக்குமூலம்கொடுத்தேன்.

# பல்கலைக்கழகப் பிரவேசம் கிடைக்கும்?

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்தவருடம் பல்கலைக் கழகப் புகுமுகப் பரீட்சையில் கூடுதல் புள்ளிகள் பெற்றிருந்தும் இடமின்மையென்ற காரணத்தினால் பல்கலைக்கழகத்தில் பிரவேசம் மறுக்கப்பட்ட 35 தமிழ்க்கலைப்பிரிவு மாணவர்களுக்கும் இம்முறை பல்கலைக்கழகத்தில் அனுமதி அளிக்கப்படுமெனத் தெரிகிறது.

இதுசம்பந்தமாகத் தம்மைப் பேட்டிகண்ட பல்கலைக்கழகப்பிரவேசம் மறுக்கப்பட்ட மாணவர் சங்கப் பிரதிநிதிகளிடம் பிரதம கல்வி ஆலோசகர் இவ் உறுதியை வழங்கியுள்ளாராம்

ஒத் தூதுக்குழு கல்வி அமைச்சர் திரு பதியுதீன் மஹ்மூதையும் இவ்வார இறுதியில் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தப்போவதாக அறிவித்துள்ளது.

(உடுப். நி

# ஜவுளி இறக்குமதி

கோட்டை, வியா.

அடுத்த ஜனவரி மாதத்திலிருந்து ஜவுளி இறக்குமதி முழுவதையும் லங்கா சலுசலாவே பொறுப்பேற்றுச் செய்யவிருக்கிறது. உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சு இம்முடிவைச் செய்திருக்கிறது.

# மாற்றம் ரத்து

உடுப்பிட்டி, வியா.

[illegible] மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் [illegible] ஆசிரியை திருமதி முத்துப்பிள்ளைக்கு ஒரே மாதத்தில் கிடைத்த இரு இடமாற்ற உத்தரவுகளும் ரத்துச் செய்யப்பட்டு விட்டன. இவர் முதலில் புற்றளை மகாவித்தியாலயத்திற்கும் பின்னர் [illegible]க்கும் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

ஆட்சிமன்றக்கட்டிடம்

# றொறிங்ரன் சதுக்கத்தில்?

கோட்டை, வியா.

றொறிங்ரன் சதுக்கத்தில் புதிய ஆட்சிமன்றக் கட்டிடத்தைக் கட்டலாம் என்ற தீர்மானம் குறித்து வீடமைப்பு அமைச்சு ஆலோசனை நடாத்தி வருகிறது.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபம் றொறிங்ரன் சதுக்கத்திற்குச்சமீபத்திலேயே அமைக்கப்படவுள்ளதால் மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றுதல் இலகுவானது என வீடமைப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# வீடமைப்பு பற்றி இன்று கருத்தரங்கு

கோட்டை, வெள்ளி

கொழும்பு இலங்கைப் பல்கலைக்கழகத்தின் புதிய கட்டடத்தில் வீடமைப்புப் பற்றிய கருத்தரங்கம் ஒன்று இன்றுநடைபெறுகிறது.

இக்கருத்தரங்கில் வீடமைப்பு நிர்மாண அமைச்சர் திரு. பீட்டர் கெனமன், தபால் தந்தித் தொடர்பு அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் உட்பட மற்றும் கட்டிட நிபுணர்கள் அறிஞர்கள் சொற்பொழிவாற்றுவர்.

இக்கருத்தரங்கில் பங்குபற்றித் தமது கட்டுரைகளை வாசித்தளிக்கும் அறிஞர்கள் கட்டிட நிபுணர்கள், ஆலோசகர் ஆகியோரது கட்டுரைகள் யாவும் ஒன்று சேர்த்து நூலாக்கப்படவிருக்கிறது. இக்கருத்தரங்கு மூலம் அறிஞர்களைத் தெரிவுசெய்து, அவர்களை நாட்டின் தேவைக்குப் பயன்படுத்துவதே இக் கருத்தரங்கின் நோக்கமாகும்.

தாவடி, வியா.

கொக்குவில் மேற்கு ஐயனார் கோவில் வருடாந்த அலங்கார உற்சவமும் இம்முறை நடைபெறமாட்டாது ஆலய முன்மண்டபம் மடைப்பள்ளி என்பன பழுதடைந்த நிலையில் இருப்பதால், இவற்றையெல்லாம் புதுப்பித்துபுனருத்தாரணம் செய்துகும்பாபிஷேகம்செய்தபின் உற்சவம் நடைபெறுமெனத்தெரிகிறது.

றும் பிற்போக்குத்தனமானவை எனவே இவைகளோடு நாங்கள் உறவுவைத்துக் கொள்ளமாட்டோம்.

இவ்வாறு இடதுசாரிக்கம்யூனிஸ்ட் கட்சித்தலைவரும் டெல்லி சட்டசபை உறுப்பினருமான திரு. ஏ. கே. கோபாலன் பத்திரிகை நிருபர்களுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: வலதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சிநடத்தும் நிலப்பறி கிளர்ச்சி வெறும்கேலிக்கூத்தாகும். இவர்களின் முதல் தந்திரமான வேலை இந்த நிலப்பறி கிளர்ச்சியை கேரளாவுக்கு வெளியே வைத்துக் கொண்டதுதான் கேரளாவில் நடக்கவிருக்கும் இடைத்தேர்தலில் மொத்தமாக உள்ள 133 தொகுதிகளில் சுமார் 100 தொகுதிகளில் எங்கள் கூட்டணி வேட்பாளர்கள் போட்டியிடவிருககின்றனர் மிகுதி இடங்களில் உள்ள சுயேச்சை வேட்பாளரை எமது கூட்டணி ஆதரிக்கும் எனவேநாம் முழு வேகத்துடன் இந்திரா காங்கிரசை

# அபிவிருத்தி பற்றி ஆராயக் குழு

கோட்டை, புதன்


கூட்டுறவுத்துறைஊழியர்கள் அபிவிருத்தி பற்றி ஆராயகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இதனை இன்று நடந்த மந்திரிசபைக் கூட்டத்தில் வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின தெரிவித்தார்.

பாவனைப் பொருட்கள் கூட்டுறவு இயக்கத்தில் உள்ள ஊழல்களை அகற்றுதல் வெளிநாட்டு வர்த்தகத்தில் செய்யப்படும் மோசடி ஆகியவை பற்றியும் இக்குழு ஆராயும்.

# இசை விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

காரைநகர் இந்துசமய வளர்ச்சிச் சங்க ஆதரவில் ஈழத்துச் சிதம்பரம் என வழங்கும் காரைநகர் சிவன் கோயில் வசந்த மண்டபத்தில் மூன்று நாள் இசைவிழா நேற்று ஆரம்பமானது.


கிருமிகளைக் கொன்று உங்கள் குடும்பத்தைப் பாதுகாக்கிறது

ஆபத்தான கிருமிகள், உங்கள் சுற்றுப் புறங்களில் சூழ்ந்திருக்கின்றன. இந்தக் கிருமிகள், உங்கள் உடம்பில் பல வழிகளிலும் நுழைந்து, நோயும், நோய்த் தொற்றும் ஏற்படுத்த முடியும். அக் கிருமிகளிலிருந்தும் பாதுகாப்புப் பெற டெற்ரேல் பாவியுங்கள்.




வெட்டுகள், சிராய்ப்புகள், புண்கள், பூச்சிக் கடிகளுக்கு டெற்ரேல் பாவியுங்கள். அது கிருமிகளைக் கொன்று சீழ் பிடிப்பதைத் தடுக்கிறது. பிளாஸ்திரி மட்டுமே இடுவதால் ஆபத்தான கிருமிகள் உள்ளே அடைபட்டுச் சீழ்ப்பிடிப்பை உண்டாக்குவன.



டெற்ரேலை, குளிக்கும் தண்ணீரிற் சேருங்கள். குளியற் தொட்டியிற் சேர்த்த டெற்ரேல், உங்கள் குடும்பத்தை நோய்த் தொற்றிலிருந்து பாதுகாக்கும்.



டெத்ரேல், மாதரின் அந்தரங்க சுகாதாரத்துக்கு அதி உகந்தது.

டெற்ரேல், தேகத்துக்கேற்ற தொற்று நாசினியெனினும் நோய் நிலவும் வேளைகளில் நோயாளிகளின் துணிகளையும் கழி கூடங்கள், தரைகளையும் நோய்த் தொற்றறச் செய்யவும் அதைப் பாவிக்கலாம். நோய்த் தொற்று பரவுவதை அது தடுத்துவிடும்.

உலகமெங்குமுள்ள டாக்டர்களும் ஆஸ்பத்திரிகளும் பாவிப்பது டெற்ரேல். எனெனில் அது சக்தி வாய்ந்த நம்பகமான தொற்று நாசினி என்பதை அவர்கள் அனுபவத்தில் அறிவார்கள்.

ரெக்கிட் அண்ட் கோல்மன் உற்பத்தி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அனைத்தையும் படைத்த ஆண்டவனின் பார்வையில் எல்லா ஜீவராசிகளும் சமம்தான். மனிதர்களுக்கிடையே உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாட்டை இறைவன் உருவாக்கியிருந்தால் யானைக்கும் எறும்புக்கும் உள்ள வேறுபாட்டைப் போல இதுவும் பார்க்கக்கூடியதாக இருந்திருக்கும்.

—மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49, Jaffna: Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆவணிமாதம் 5-ந் திகதி (21-8-70)


## தபால் கட்டணம்

தபால் கட்டணங்களை உயர்த்துவதுபற்றி எவ்வித முடிவும் செய்யப்படவில்லையென்று தபால் தந்தி அமைச்சர் திரு செல்லையா குமாரசூரியர் தெரிவித்திருப்பது பெரிதும் ஆறுதலளிப்பதாகும்.

நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு தபால் கட்டணங்களை உயர்த்தத்தான் வேண்டுமென்ற நிலை ஏற்பட்டால் அல்லது வரிவிதிப்பை அதிகரிக்கத்தான் வேண்டுமென்ற நிலை ஏற்பட்டாலும் என்னதான் கஷ்டம் ஏற்பட்டாலும் அவற்றை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வதற்கு இந்நாட்டு மக்கள் தேசாபிமானமுள்ளவர்கள் என்பதுஉண்மையே. பழைய அரசாங்கம் திறைசேரியில் ஒன்றையும் வைத்துவிட்டுப் போகவில்லையென்று புதிய அரசாங்கம ஆட்சிக்கு வந்ததும் நிதி அமைச்சர் தெரிவித்தார். இதைக் கேள்வியுற்றதும் தொழிலாளர்முதல் பெரிய முதலாளிகள்வரை நாட்டைக்காக்கும் நிதிக்கு அள்ளிஅள்ளி வழங்கி வருவதென்றே இந்நாட்டு மக்களின் தேசாபிமானத்துக்கு உதாரணமாகும்.

நிதி நிலைமை சீரானால்தான் இன்றைய ஆட்சியாளரான கூட்டணியினர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்தபடி வாழ்க்கைச்செலவு உயர்வைக் குறைக்கவும் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கவும் எதையும் செய்யமுடியுமென்பதையும் மக்கள் உணர்ந்துள்ளனர். நாட்டைக் காக்கும் நிதிக்கு மக்கள் தாமாகவே விரும்பி நிதி அளித்து வருவதற்கு இதுவுமொரு காரணம்.

ஆனால் நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக தபால் கட்டணங்களை உயர்த்துவதை மக்கள் ஏற்றுக்கொள்ள முன் வரக்கூடுமென்றாலும் தபால் இலாகா சீர்பெறுதவரை கட்டண உயர்வு பற்றி மக்கள் மத்தியில் முணுமுணுப்பு ஏற்படவே செய்யும்.

லண்டனிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் கடிதமும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் கடிதமும் ஒரே நேரத்தில்தான் கிடைக்கின்றன,

தந்திகள் பலவும் தபாலிலேயே கிடைக்கின்றன,

உரிய விலாசத்துக்கு உரிய நேரத்தில் தபால்கள் கிடைக்குமென்ற நம்பிக்கைஇல்லை.

பார்சல்கள் பவித்திரமாகப் போய்ச் சேருமா என்ற உத்தரவாதம் பார்சல் அனுப்புபவருக்கு இருக்க முடியாது.

தேவையான முத்திரைகள் தேவையான சமயத்தில் கிடைக்குமென்ற நம்பிக்கையும் இல்லை,

இந் நிலையில் தபால் கட்டணங்களை உயர்த்துவதை மக்கள் மகிழ்ச்சியோடு வரவேற்பார்களென்று எதிர்பார்க்க முடியாது,

இந்த வகையில் தபால் கட்டணங்களை உயர்த்துவதென்று விசாரணைக் குழு சிபார்சு செய்திருந்த போதிலும் அதைச் செயல்படுத்துவதுபற்றி இன்னும் எவ்வித முடிவும் செய்யப்படாதது வரவேற்கத் தக்கது.

தபால் இலாகாவை அதன் [illegible]

## திருமலையில் பலவந்த குடியிருப்பு

திருகோணமலை வியாழன்

திருகோணமலையில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு அண்மையில் உள்ள முடிக்குரிய காணிகளில் பொதுமக்கள் பலர் குடியேறிவருகின்றார்களாம். சொந்தக் காணி இல்லாதவர்கள் பலவந்தமாக இக்காணிகளில் குடியேறுகிறார்கள். காடுகள் திடீர்திடீரென அழிக்கப்பட்டு இப்பகுதிகளில் வீடுகளும் கட்டப்பட்டுள்ளன"

## புதிய தேசிய உடை

கோட்டை, வியாழன்

ஆண், பெண் இருபாலாருக்கும் தேசிய உடையொன்றைக் கொண்டுவர கலாச்சார அமைச்சின் மத்திய ஆலோசனைக்குழு ஆலோசனை நடத்திவருகிறது.

நாட்டின் கலாச்சாரத்திற்கும், காலநிலைக்கும் அமைய இந்தத் தேசிய உடை தெரிவுசெய்யப்படும். தற்போதுள்ள தேசிய உடையை மேற்படி குழு விரும்பவில்லை. இந்தியாவைப் பின்பற்றி அமைந்த இந்த ஷர்வாணி உடை கச்சிதமற்றதெனக் குழு அபிப்பிராயப்படுகிறது

## வரவேற்பு

ஏருலூர், வியா

ஆறுமுகத்தான் குடியிருப்பிலுள்ள பாரதி கிராம முன்னேற்றச் சங்கம் எதிர்வரும் 24-ம் திகதி மாலை அகில இலங்கைச் சிறுபான்மை மகாசபைத் தலைவரும், நியமன எம். பியுமாகிய எம். ஸி. சுப்பிரமணியத்திற்கு வரவேற்பு ஒன்றை அளிக்கவிருக்கின்றனர்.

## புதிய உத்தியோகத்தர்

பருத்தித்துறை, வியா.

வடமாகாணப் பாடசாலைகளின் விஞ்ஞான வெளிவேலை நிலையப் புதிய உத்தியோகத்தர் பெயர்கள் வருமாறு:

தலைவர்: திரு. தோமஸ் ஈப்பென் [வதிரி திரு இருதயக்கல்லூரி]. உப தலைவர்: திரு. எஸ். சத்தியமூர்த்தி [வல்வை சிதம்பரா], செயலாளர்: திரு. க. தம்பிராசா [நெல்லியடி ம. ம. வி]" பொருளாளர்: திரு. கே. சண்முகநாதன் [ஹாட்லிக் கல்லூரி]. கணக்காளர்: [illegible]

யாழ். மாநகரசபையில்

# பாப்பரசரை வரவேற்கும் தீர்மானம் நிறைவேறியது

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியின்மேற்பார்வைச்சபையில் தற்போது அங்கம் வகிக்கின்றவர்களுள் பெரும்பான்மையினர் வசதி உள்ளவர்கள். இந்த சபையை நீக்கி கஷ்டப்படுகிறவர்களின் பிரதிநிதிகளை அங்கத்தவர்களாக்கவேண்டும்.

இவ்வாறு நேற்று முன்தினம் மேயர் எஸ். துரைராசா தலைமையில் நடைபெற்ற யாழ். மாநகரசபைக கூட்டத்தில் ஆஸ்பத்திரியின் நிர்வாகம் சம்பந்தமான பிரேரணை ஒன்றை திரு. நா. மார்க்கண்டு பிரேரித்துப் பேசும் போது குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அசிங்கமான பாத்திரங்களே உபயோகிக்கப்படுகின்றன. துர்நாற்றம் வீசும் அசுத்த மல சல கூடங்களுக்குப் பக்கங்களில்சாப்பாட்டறைகளுள்ளன சாப்பாட்டறைமேசையில் காகங்கள் எச்சமிட்டுள்ளன என்றும் திரு. மார்க்கண்டு தமது பிரேரணையின் போது கூறினார்.

இவரின் குற்றச்சாட்டுக்களின் மீது பேசிய திருமதி அந்தோனியா சாமிநாதன் இலங்கையிலுள்ள பல ஆஸ்பத்திரிகளுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாண ஆஸ்பத்திரி மோசமானதாகவில்லை என்றார். சிலதிருத்தங்களுடன் பிரேரணை நிறைவேறியது.

திரு. எம். எஸ் பேரின்பநாயகம் பாப்பரசரை வரவேற்கும் பிரேரணையை கொண்டு வந்தார் யாழ். மேற்றிராணியாரின் ஆலோசனை இதுவிடயமாக பெறப்படவேண்டுமென்ற திரு சே யோ. வீரசிங்கத்தின் ஆலோசனையுடன் இத்தீர்மானம் நிறைவேறியது.

மின்சாரம் சம்பந்தமான பிரேரணை மீதான விவாதத்தின்போது திருவாளர்கள் என் ரி செல்லத்துரை இராஜசூரியர் ஆகியோர் வெளிநடப்புச் செய்தனர். திரு. இராஜசூரியர் சிறிது நேரத்தின்பின் சபைக்கு வந்தார்.

ஒரு கட்டத்தில் உதவி மேயர்திரு ஆ துரைராசசிங்கம் தலைமையில் சபைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

(கு வி ம)

## 'கலைத்துறை வளர்ச்சிக்கு இன்றைய அரசு உதவும்'

### கதம்பவிழாவில் கல்லூரி அதிபர்

உடுவில், வியாழன்

'தமிழினத்தின் முக்கிய கலைகள் சங்க காலத்தில் வளர்ச்சியுற்றிருந்தன. ஆனால் பிற்காலத்தில் அந்நிய கலைகளின் ஊடுருவல்களால் மங்கிப்போயின. பிறநாட்டு நடனங்களும், இசைகளும் நம் மத்தியில் பரவி, நமது கலைகளுக்கு ஓய்வு கொடுத்தன. ஆனால் இன்று இக்கலைகள் மீண்டும் புத்துயிர் பெறத் தொடங்கியிருக்கின்றன. கிராமங்கள் தோறும் கலை வளர்ச்சிக் கழகங்களும். கல்லூரிகளும் தோன்றி எமது கலையை வளர்க்கவும், தமிழினத்திடையே ஒருவிழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும் செய்துள்ளன. எமது பண்டைய கலை கலாச்சாரங்களை வளர்க்க கிராமியக் கலைக் கல்லூரிகள் ஒவ்வொரு கிராமங்களிலும் வேண்டும்'.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரிவிடுதி மண்டபத்தில் நடைபெற்ற கதம்ப விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசிய கல்லூரி அதிபர் திரு பி ஏகாம்பரம் தமது தலைமையுரையில் மேற்கண்டவாறு கூறினார். அவர் [illegible]லும் பேசியதாவது:-

தேசிய கலை, கலாச்சாரங்களை வளர்ப்பதிலும் அவற்றை ஊக்குவிப்பதிலும் இன்றைய அரசாங்கம் ஆர்வம் காட்டி வருகின்றது எமது கலைஞர்களிடையே பல திறமைசாலிகள் மறைந்து கிடக்கின்றார்கள். அவர்களை முன்னுக்குக் கொண்டு வந்து நல்லபல நாடகங்களையும், இசை, நடனங்களையும் அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் நமது கலைஞர்கள் வளர்க்க முன்வரவேண்டும்.

இணுவில் இசை நடன கிராமியக்கலைக் கல்லூரி நிர்வாகியான திரு தி.ச சண்முகலிங்கம் தமது வரவேற்புரையில் கூறியதாவது:

நமது சமூகத்தவர்கள் பிறநாட்டு இசைகளுக்கும், நாடகங்களுக்கும் கொடுக்கும் ஆர்வத்தை நமது கலைஞர்களுக்கு வழங்குவதில்லை. சினிமாக்களும் டப்பா சங்கீதங்களும் நமது கலைகளை வெகுவாகப் பாதிக்கின்றன. டப்பா சங்கீதத்திற்கும், சினிமாக்களுக்கும் கொடுக்கும் ஆதரவை கிராமிய நடனங்களுக்குக் கொடுப்பதன் மூலம் ஒரு புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும்.

நானுவித கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெற்றன.

## "கலை பாகுபாட்டை அகற்றும் கருவியாகும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோகிலாதேவி ...

(2 ம் பக்கத்தொடர்ச்சி)

கொண்டு முல்லைத்தீவு டிப்போவுக்குச்சென்று மனேச்சரிடம் சம்பவத்தை அறிவித்தேன். பின்னர் அவரின் சொற்படி பஸ்ஸையும் பஸ்ஸில் மரணமான துரைராசாவின் சடலத்தையும் கொண்டுபோய் பொலிசில் பாரம் கொடுத்தேன்'

எதிரிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு ஜீ. ஜீ பொன்னம்பலத்தின் கேள்விகளுக்குச் சாட்சி பதிலளித்தார்.

கே: நீர் அன்று எத்தனை மணிக்கு வேலைக்குப் போனீர்? பதில்: பிற்பகல் 12-15க்கு. கே: கண்டக்டர் யார்? பதில்: காலம் சென்ற துரைராசா.

கே: நீர் சாப்பாட்டுக்குப் போகவில்லையா? பதில்: வேலைக்கு வரும்போது சாப்பிட்டு விட்டு வந்தேன்

கே: பிற்பகல் 12-15 முதல் இரவு 11-15 வரை இருவரும் ஒன்றாய் இருந்தீர்கள்? பதில்: ஆம்.

கே: நீர் இரவு சாப்பிட்டீரா? பதில்: ஆம். வீட்டில் இரவு 8 40 மணிக்குச் சாப் [illegible]

நீர்வேலியில்

# 20 ஆண்டு நிறைவு கொண்டாடும் ச. ச. நிலையம்

நீர்வேலிகாமாட்சியம்பாள் சனசமூக நிலையம 1950ம் ஆண்டு பலரின் நல்லாதரவுடன் ஓர் வாடகைக் கட்டிடத்தில் உதயமாயிற்று. அன்று தொட்டு தனது 4வது வயது முடிவடையும் வரை அக்கட்டிடத்திலேயே வளர்ந்து வந்தது. தனது 5வது வயதில் நீர்வேலி காமாட்சியம்பாள் ஐக்கிய கைத்தொழிற் சங்க வளவில் இதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒரு சிறிய கட்டிடம் அமைத்து அதில் வளரலாயிற்று. இக் கட்டிடத்தில் சுமார் 9 வருடங்கள் சேவையாற்றித் தனது 13 வது வயதில் 1963ம் ஆண்டு பலரின் மதிப்பிடற்கரிய உதவியினாலும், நிர்வாகிகளின் அயரா உழைப்பாலும் ஓர் எழில் மிகு இரண்டடுக்கு மாளிகையை தனது இல்லமாக அமைத்துக் கொண்டது

இவ்வழகு மிகு இல்லத்தில் ஆசிய நிறுவனத்தின் உதவியால் ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள புஸ்தகங்களைப் பெற்று நூல் நிலையம் அமையலாயிற்று இந்து சமய விருத்திக் கழகம், இளைஞர் முன்னேற்றக்கழகம், விளையாட்டுக்கழகம், கலைக் கழகம் ஆதியனவும் அமைத்துச் சிறந்து விளங்கும் இச் சனசமூக நிலையம் பலரின் மதிப்புப் பெறும் ஒரு நிறுவனமாக இயங்கி வருகிறது:

இங்கே பொதுசன அபிப்பிராயத்தை வளர்க்கும் சாதனங்களில் முக்கியத்துவம் வாய்ந்த ஆங்கில. தமிழ்ப் புதினப்பத்திரிகைகள் இன்னும் மாதாந்த வாராந்தப் பத்திரிகைகளும் பொது மக்களுக்குப் பயன் அளிக்கின்றன.

மேல்மாடியில் அணிசெய்யும் நூல் நிலைய மூலமாக மக்களுக்குச் சிறந்த இதிகாசங்கள், இலக்கியங்கள் இலக்கணங்கள். புராணங்கள், சிறுகதைகள், சரித்திரங்கள் என்பன நிறைந்த புஸ்தகங்களை வழங்கி நல்லறிவு புகட்டி வருகின்றது.

இந்துசமய விருத்திக் கழக மூலமாக சமயவிழாக்களையும் சமய குரவர்களின் குருபூசைகளையும் சிறப்புறச் செய்வதோடு மாணவர்களிடையே சமயக் கல்வி வளரப் பேச்சுப்போட்டிகள் நடாத்தி ஊக்கம் அளிக்கின்றது.

இளைஞர் முன்னேற்றக் கழகம் மூலமாக தமிழ் வளர்த்த பெரியார்களின் தினங்களைக் கொண்டாடுவதோடு மாணவரிடையே அவர்கள் காட்டிய வழியை உணர்த்தப் பேச்சுப் போட்டிகள் நடாத்திப் பரிசில்கள் வழங்கி ஊக்கம் அளிக்கின்றது.

விளையாட்டுக் கழகம் மூலமாக வருடாவருடம் விளையாட்டுப்போட்டி நடாத்தி வருகிறது. கலைக்கழகம் மூலமாக மக்களிடையே கலை வளர உதவிகள் புரிகின்றது. இப்போது ஒரு கோலாட்டக் குழுவை வைத்திருக்கின்றது கடந்த வருடம் நடைபெற்ற உள்ளூராட்சி வார விழாக் கோலாட்டப் போட்டியில் மேற்படி நிலையக் குழுவே யாழ்மாவட்டத்தில் முதலிடம்பெற்றது. குறிப்பிடத்தக்கது.

இதேபோல பல வழிகளிலும் பொது மக்களுக்குச் சேவையாற்றிவரும் இந்நிலையம் பாலர் முதல் வயோதிபர் வரையிலான பலரதும் நன்மதிப்பைப் பெற்ற மகிழ்ச்சியால் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தனது 20 வது ஆண்டு நிறைவை வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றது.

இந் நிலையம் மேன்மேலும் வளர்ச்சியடைந்து நாட்டிற்குத் தொண்டாற்றப் பிரார்த்திப்போம்.

த.பரராசசிங்கம்
நீர்வேலி

## தொழிலாளர் மாநாட்டில் எம். ஸி.

ஏருலூர், வியா.

இம்மாதம் 23-ம் திகதி நடைபெறவிருக்கும் பொத்துவில் சலவைத் தொழிலாளர் மகாநாட்டில் அகிலஇலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபைத் தலைவரும் நியமன எம். பி.யுமான திரு. எம். ஸி. சுப்பிரமணியம் [illegible]

## சமயப் பெரியாரின் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

சங்கைக்குரிய செய்க் முஹையத்தீன் குருபாவா இறைவன் உணர்ச்சிக்கும் மனித உணர்ச்சிக்கும்உள்ள ஒற்றுமை மனிதனுக்கும் மிருகங்களுக்கும் உள்ளவித்தியாசம் பற்றிய கருத்துகளை சனிக்கிழமை நாளை பிற்பகல் நடைபெறும் பொதுக்கூட் [illegible]

எதையும் செய்யமுடியுமென் பதையும் மக்கள் உணர்ந்துள்ளனர். நாட்டைக் காக்கும் நிதிக்கு மக்கள் தாமாகவே விரும்பி நிதி அளித்து வருவதற்கு இதுவுமொரு காரணம்.

தபால்கட்டணத்தை உயர்த்தும் விஷயத்திலும் மக்களின் மன நிலையை அறிந்து சிபார்சு செய்திருந்த போதிலும் அதைச் செயல்படுத்துவதுபற்றி இன்னும் எவ்வித முடிவும் செய்யப்படாதது வரவேற்கத் தக்கது.

தபால் இலாகாவை அதன் சேவையை துரிதமாக ஓரளவாவது சீர்செய்தபின்னர் தபால் கட்டணங்களை உயர்த்துவதே விவேகம்,

திரு. எஸ். சத்தியமூர்த்தி [வல்வை சிதம்பரா], செயலாளர்: திரு. க. தம்பிராசா [நெல்லியடி ம. ம. வி]' பொருளாளர்: திரு. கே. சண்முகநாதன் [ஹாட்லிக் கல்லூரி], கணக்காளர்: திரு. கே. சண்முகசுந்தரம் [உடுப்பிட்டி மிஷன்].

திருவாளர்கள் ஏ. செல்வநாயகம், வீ. சிவசுப்பிரமணியம், எம். அற்புதநாதன், வீ. தம்பிப்பிள்ளை, எம். சபாரத்தினம் ஆகியோர் நிர்வாக உறுப்பினராகத் தெரியப்பட்டனர்.

தேசிய கலை, கலாச்சாரங் றன.

# "கலை பாகுபாட்டைஅகற்றும் கருவியாகும்"

யாழ்ப்பாணம், வெள்ளி "கலையின் மூலமே பெரும்பான்மை சிறுபான்மையென்ற பாகுபாடு நீங்கும், கலையினில் ஆழ்ந்துள்ளவர்கள் இன மதம் கடந்தவர்களாவர்'

இவ்வாறு யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சித்திரவடிவு புத்தாக்கப் பயிற்சி வகுப்புக் கருத்தரங்கை ஆரம்பித்துவைத்த பிரதம வித்தியாதிகக்ரி திரு சந்திரசேகரம்பிள்ளை தெரிவித்தார்.

விடுமுறைக் காலத்தில் சித்திரவடிவு புத்தாக்கவகுப்புப் பயிற்சியை சித்திரவித்தியாதரிசி திரு. ஆ. தம்பித்துரை ஒழுங்கு செய்திருந்தார்

இவ்வகுப்பைப் பார்வையிட அனுராதபுரம், மாத்தறை, கம்பகா, கேகாலை, இரத்தினபுரி முதலானஇடங்களிலிருந்தும் சித்திர வித்தியாதரிசிகள் வந்திருந்தனர்.

வடமாநிலக் கல்வி அதிபர் திரு. வி. சங்கரலிங்கம் வகுப்பைப் பூரணப்படுத்திய போது கூறியவை வருமாறு:

பயிற்சி வகுப்புகள் ஆசிரியர்களின்அறிவை அனுபவப் பயிற்சியுடன் வளர்க்க உதவுகின்றது. சித்திர வகுப்பில் பங்குபற்றிய ஆசிரியர்கள் பலர் சித்திரக் கல்வியின் புதிய அம்சங்களை அனுபவவாயிலாகப் பெற்றுள்ளனர். இது அவர்கள் எதிர்காலத்தில் பிள்ளைகளின் அறிவை விருத்திசெய்ய பயன்படும். இத்தகைய நன்முயற்சிக்கு வித்திட்ட திரு. ஆ. தம்பித்துரையையும் பங்குபற்றிச் சிறப்பித்த பிரதம சித்திர வித்தியாதிபதி திரு. பி. எஸ் விஜயரத்தினவையும் வெளியூர் சித்திர வித்தியாதரிசிகளையும் பாராட்டுவது நம் கடமையாகும்.

சித்திரப் புகைப்படக்காட்சியும் பயிற்சி வகுப்பின் போது நடைபெற்றது.

(கு வி ம)

கே: பிற்பகல் 12-15 முதல் இரவு 11-15 வரை இருவரும் ஒன்ருய் இருந்தீர்கள்? பதில்: ஆம்.

கே: நீர் இரவு சாப்பிட்டீரா?பதில்: ஆம். வீட்டில் இரவு 8 40 மணிக்குச் சாப்பிட்டு இரவு 10-15 பஸ்ஸை எடுத்தேன்:

கே: இரவு 8-40 மணிக்கும் 10-15 மணிக்குமிடையே காலம் சென்றவர் உம்முடன் நின்ருரா? பதில்: இல்லை, அவர் எங்கு சென்ருர், சாப்பிட்டாரா என்பது தெரியாது,

கே: நீர் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் கோகிலா தேவியைத் தெரியும் என்று கூறினீர்? பதில்: ஆம்,

கே:- எவ்வளவு காலமாகத்தெரியும்? பதில்: பஸ்ஸில் பாடசாலை நாட்களில் செல்லும்போது.

கே;- கோகிலாதேவிக்கும் காலமானவருக்கு மிடையே காதல் இருந்தது தெரியுமா? பதில்: தெரியாது

கே:- உமக்குத் தியாகராசா ஆசிரியர் கோகிலா தேவிக்குக் காலம் சென்றவர் கடிதம் கொடுத்ததை கண்டேன் என்று சொன்ருரா? கேள்விப்பட்டேன் என்று சொன்ருரா? பதில்: கேள்விப்பட்டேன் என்று தான் சொன்ருர்.

கே: காலம் சென்றவர் படுத்திருந்த பாய் தலையணை

நடைபெறவிருக்கும் பொதுவில் சலவைத் தொழிலாளர் மகாநாட்டில் அகிலஇலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபைத் தலைவரும் நியமன எம். பி.யுமான திரு. எம். ஸி. சுப்பிரமணியம் கலந்து கொள்ளுகிருர்.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, யாழ்ப்பாண மாவட்ட கம்யூனிஸ்ட் செயலாளர் திரு. வ. பொன்னம்பலம், திரு. கிருஷ்ணகுட்டி, திரு. சதாசிவம் (பொத்துவில் கிராமசபை உறுப்பினர்) உட்படப் பலர் இதில் கலந்துகொண்டு பேசுவர்

போர்வை ஒன்றிலாவது இரத்தம் பட்டிருந்ததைக் கண்டீரா?-இல்லை.

கே: கமலகாந்தன் என்ன சொன்ருர்? என்னவோ சத்தம் கேட்குது என்ருர். அதன்பின்தான் நான் லைட்டை அடித்து இறந்தவரைப் பார்த்தேன்.

கே: நீர் வெளியில் லைட்டை அடித்துப் பார்த்தீரா? -இல்லை,

இதன்பின் விநாசித்தம்பி கமலகாந்தன் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து நீதிபதி மேல்விசாரணையை அடுத்த மாதம் 16-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்

இறைவன் உணர்ச்சிக்கும் மனித உணர்ச்சிக்கும்உள்ள ஒற்றுமை மனிதனுக்கும் மிருகங்களுக்கும் உள்ளவித்தியாசம் பற்றிய கருத்துகளை சனிக்கிழமை நாளை பிற்பகல் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் விளக்குவார்.

இக்கூட்டம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் ஜனாப் ஏ. எச். எம். இஸ்மாயில் தலைமையில் நடைபெறும்.

## கரிபியனில் சோவியத் ஊடுருவல்?

நியுயோர்க், ஆக. 20

சோவியத் யூனியன் கரிபியன் கடற் பிரதேசத்தில் ஊடுருவியுள்ளது குறித்து அமெரிக்க அதிகாரிகள்கவலை கொண்டுள்ளனர். இப்பிரதேசத்தில் சோவியத்போர்க்கப்பல்களும், அணு ஆயுதம் பொருத்தப்பட்ட நீர்மூழ்கிகளும் ஊடுருவல் செய்திருப்பதாக அவர்கள் அச்சம் கொண்டுள்ளனர். கியுபாவில் ஏவாயுதத் தளங்களை ரஷ்யர்கள் மீண்டும் நிறுவுவதில் ஈடுபட்டிருப்பதாகவும் அமெரிக்கர் கருதுகின்றனர்.

## உப தபாற் கந்தோர்கள் மூடப்படும்

உடுப்பிட்டி, வியா.

அல்வாய், குடத்தனை உப தபாற்கந்தோர்கள் விரைவில் மூடப்பட்டுவிடும் என அறியப்படுகிறது. இவ்விரு உபதபாற்கந்தோர்களும் பருத்தித்துறைத் தபாற் கந்தோருடன் இணைக்கப்படும் எனத் தெரியவருகிறது.

## யாழ் பஸ்களில் களவு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணப் பகுதிகளில் சேவையில் ஈடுபடும் பஸ்களில் களவுகள் அதிகரித்து வருவதாக புகார் கூறப்படுகிறது. நேற்றுமுன்தினம் பஸ் நிலையத்திலிருந்து கச்சேரியடிக்குச் சென்ற ஒரு பெண்மணியின் பொருட்கள் களவுபோய் விட்டன.

இரு சாக்குகளில் வைக்கப்பட்டிருந்த 51 ருபா பெறுமதியான உணவுப் பொருட்கள் பஸ் நிலையத்திற்கும் கச்சேரிக்குமிடையில் களவுபோய் விட்டதாக நல்லூர் கோவில் வீதியைச் சேர்ந்த திருமதி குமாரசுவாமி இராசம்மா புகார் தெரிவித்துள்ளார், (கு. வி. ம)

## திருமண அழைப்பு

மாணிக்கவாசகர் — பரமேஸ்வரி

எமது பிள்ளைகள் (மாணிக்கவாசகர், M.O.H. அலுவலகம், மந்திகை, — பரமேஸ்வரி ஆகியோரின்) திருமணம், புலோலி மேற்கு, தென்னிங்கவத்தையிலுள்ள மணமகள் இல்லத்தில் 21-8-70 வெள்ளி இரவு 10—12 மணிக்கிடையிலுள்ள சுபவேளையில் நடைபெறும், அனைவரையும் ஆசி நல்க அழைக்கின்ருேம். அழைப்பாளர்கள்: ச. அருணசலமும் துணைவியும், க. ஆறுமுகமும் துணைவியும். 3078


விரைவில் வெளிவருகிறது!

மக்கள் பிரதமர்

ஸ்ரீமாவோ!

★ ★ ★

பாமா ராஜகோபால்

எழுதிய சுவைமிக்க நூல்.

2448


## இன்றைய பலன்

(ஆவணி மாதம் 5-ம் திகதி) (21-8-70)

மேஷம்: நல்லகாரியங்களை ஆரம்பிப்பதற்கு இன்று பொன்னன நாள். தொழில் புரியும் இடத்தில் பாராட்டுக்கள் கிடைக்கும்.

ரிஷபம்: நினைத்தது நடக்காது. நிம்மதி பறக்கும். நெடும்பயணம் வேண்டாம். பொருள் தவறக்கூடும்.

மிதுனம்: தரமானவாழ்வு கிட்டும். எதிரிகள் பணிவர். எதிலும் வெற்றிஉண்டு.

கடகம்: புத்திக் கூர்மையுடன் புதிய எண்ணங்களும் தலைதூக்கும். இறை நம்பிக்கையுடன் இல்லத்தில் அமைதி தவழும்.

சிம்மம்: கழுகுப்பார்வை உங்களை வட்டமிடும். எதிரிகள் காத்திருப்பர்; எதிலும் அவதானம் வேண்டும்.

கன்னி: காதலர்களுக்கு கன குஷியானதினம். பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும். இன்று சுபதினம்,

துலாம்: நாளெல்லாம் அலைச்சல். உடலில் நலிவு தோன்றும். பிணிக்கு இடங்கொடாது சுகாதாரத்தைப் பேணுக,

விருட்சிகம்: தருமகாரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள். தெய்வத்தின் துணை உண்டு.

தனுசு: வணிகர்களுக்கு வியாபார விருத்திக்கு இடமுண்டு. செலவினங்கள் கைக்கடங்கியதாக இருக்கும்.

மகரம்: உழைப்பினால் முன்னேற்றம் ஏற்படும். கல்வியில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாகதினம்.

கும்பம்: கழுகுப் பார்வை வட்டமிடும். காத்திருப்பர். பகைவர். நிதிநெருக்கடியைத் தவிர்க்க மதிவழி நில்,

மீனம்: முன்னேற்றம் தடைபடும். சிலரைப்பகைத்துக்கொள்ள நேரிடும், அமைதி நன்று.

திருமலை

க. வேலுப்பிள்ளை

வலி - மேற்கு

## கயரோகப் பிரச்சாரப்போட்டி

தாவடி, வியாழன்

இலங்கைக் கயரோகேதிவாரண தேசியசங் கவலிகாமம்மேற்குக்கிளையின் 13-வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கயரோகப் பிரச்சாரப் போட்டிகள் நடைபெற விருக்கின்றன அப் பகுதியிலுள்ள பாடசாலைகள் சங்கங்கள் வைத்திய சாலைகள் என்பவை மூலம் போட்டிகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றிபெறும் பாடசாலைக்கு டாக்டர். பாக்கியநாதர் அத்தனுசியார் வெற்றிக்கிண்ணமும் சங்கத்திற்கு முனிர் வெற்றிக்கிண்ணமும். வைத்திய சாலைக்கு திரு. ஜே. பி. நாகலிங்கம் வெற்றிக்கிண்ணமும் பரிசுகளாக வழங்கப்படும்.

கயரோக அறிவு எழுத்துப் பரீட்சை கயரோகச் சித்திரப் போட்டி கயரோகப்புது அறிவு மொழிச் சுலோக அட்டைப்போட்டி வில்லுப்பாட்டு, நாடகம் குழுப்பாட்டு சம்பாஷணை பிரசாரக் காட்சிவாகனம் அணி நடை உட்படப் பல போட்டிகள் இதில் இடம் பெறும்.

போட்டிகளுக்கான ஒழுங்குகளை செயலாளர் திரு. உ. ந. தேவகடாட்சம்கவனித்து வருகிருர்.

## சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணுர்பண்ணை கலாஜோதி நிலையத்தினர் தமது வருடாந்த சமய அறிவுப் போட்டியை இம்முறையும் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர். மாணவ, மாணவியருக்கிடையில் நடத்தப்படும் இப்போட்டிக்கான விண்ணப்பங்கள் இம் மாதம் 28-ம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சனசமூகநிலையம் நல்லூர் கந்தன் வருடாந்த உற்சவ காலங்களில் தண்ணீர்ப் பந்தல் அமைத்து நடத்தி வரும் பணிகளை யொட்டி பத்தாவது ஆண்டறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருக்கின்றது

## யாருடையது

சில சில்லறைகளும் மற்றும் சில றிஸீற்களும் கொண்ட கி பேர்ஸ் ஒன்றை மானிப்பாய் அந்தோனியார் கோவிலடியில் திரு. ரி. சிவஞானசுந்தரம் என்பவர் கண்டெடுத்து ஈழநாடுகாரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார் உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

# ட்ராக்டர் சாரதிப்போட்டி!

## விவசாய இலாகா 1-ம் திகதி பரந்தனில் நடாத்துகிறது

யாழ்ப்பாணம், வெள்ளி

விவசாயிகளுக்கிடையேயான ட்ராக்டர் போட்டி ஒன்று அடுத்த மாதம் 1-ம் திகதி நடைபெறவிருக்கிறது. பரந்தன் அரசாங்க நெற் பண்ணையில் நடைபெறவிருக்கும் இப் போட்டியை யாழ். மாவட்ட விவசாய இலாகா ஒழுங்கு செய்துள்ளது.

நாலுசில்லு ட்ராக்டர், இரண்டு சில்லு ட்ராக்டர் உள்ளவர்கள் இதில் பங்கு பெற்றலாம் என்றும், நாலு சில்லு ட்ராக்டர் போட்டியில் பங்கு பற்றுபவர்கள் பெட்டியுடனும், 'ரயின் ரிலருட்'னும் சமூகமளிக்க வேண்டும் என்றும், இரண்டு சில்லு ட்ராக்டர்காரர் உழவு ஏதனத்துடன் சமூகமளிக்க வேண்டும் என்றும் யாழ். மாவட்ட விவசாய அதிபர் திரு. பொ. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார்.

போட்டியில் பங்குபற்றுபவர்கள் அவரது வட்டார விவசாயப் போதனசிரியரிடமிருந்து நற்சான்றுப் பத்திரம் பெற்று, அதை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். இம் மாதம் 29-ம் திகதிக்கு முன்னராக விண்ணப்பங்களை அனுப்பிவைக்கும்படி கோரப்பட்டுள்ளது.

ட்ராக்டர் செலுத்தி வெற்றியீட்டும் சாரதிக்கு தங்கப்பதக்கமும், கிண்ணங்களும் பரிசுகளாக வழங்கப்படும். தபால் தந்தி போக்குவரத்து அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர், விளையாட்டு, பாராளுமன்ற விவகார அமைச்சர் திரு. கே. பி. இரத்திஞயக்கா ஆகியோர் பரிசில்களை வழங்குவர். (கு. வி. ம)

## ஆற்றுப்பாலத்தை பிரதமர்திறப்பார்

கோட்டைவியாழன்

பிட்டியாகெவரை என்ற இடத்தில் அத்தனகலு ஓயா ஆற்றில் கட்டப்பட்டபாலத்தை இம்மாதம் 29ம் திகதி பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா திறந்துவைப்பார். இப்பாலம் 4,22,000 ருபா செலவில் கட்டப்பட்டது. இதனுடையநீளம் 190 அடியாகும்,

## நடன ஆசிரியர்களை நியமிக்கத் தீர்மானம்

கோட்டை, வியாழன்

கல்வி அமைச்சு சுமார் 300 நடன ஆசிரியர்களை பாடசாலைக்கு நியமிக்கத் தீர்மானித்துள்ளது.

## சிருங்கேரி ஆஸ்தான வித்துவான்

கோட்டை, வியா

நேற்று கொழும்பு வந்துள்ள சிருங்கேரி ஆஸ்தான வித்துவான் ஸ்ரீ. கே எஸ் ராமகிருஷ்ண சாஸ்திரிகள் ஒருமாதம் இங்கு தங்கியிருந்து யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய இடங்களில் சொற்பொழிவாற்றுவார்.

## 8-வது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

வல்வெட்டி வளர்மதி விளையாட்டுக்கழகத்தின் 8-வது வருடாந்தவிளையாட்டுப்போட்டி இம்மாதம்30ம் 31ம் திகதிகளில்கழகமைதானமாகிய வேவிலில் மின்ஒளியில் நடைபெறவிருக்கின்றது

அகில இலங்கை ரீதியில் 15 மைல் சைக்கிளோட்டப் போட்டி, 5 மைல் மரதன் ஓட்டப்போட்டியும் வடமராட்சி ரீதியில், மல்யுத்தப்போட்டியும் மற்றும் புதையல் தேடுதல் போட்டி, ஒரு மைல் ஓட்டப் போட்டி, கிறிஸ்கம்பம் கழகங்களுக்கான அஞ்சலோட்டப்போட்டிகளும் இடம் பெறும்,

31-ந் திகதி நிகச்சிகளுக்கு திருமலை காணி அபிவிருத்தி அதிகாரி என் தேவதாஸ், தலைமைதாங்குவார் பிரதம விருந்தினராக பளை விகனிஷ்ட பல்கலைக்கழக உப அதிபர் திரு சிவபாலன் கலந்துகொள்வார்


இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org